ISSN-2613-828X

வாரமலர்

# யாழ் களரி

விலை 100/=

" செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார் "

yarlgallery@gmail.com


உதயம் : 06 | 06.04.2025 - 14.04.2025 | களரி: 43

# உண்மையான வலுவூட்டல் கல்வியினூடாகத்தான் நடக்கும்



யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராசா யாழ்களரிக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்

03



## மாபெரும் அரங்க ஆற்றுகை 'வெள்ளியில் ஞாயிறு'

07

## யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் பிரதமர் மோடியிடம் கோரிக்கை..!

02



## மோடி – அநுர சந்திப்பில் என்ன நடந்தது?



## உள்நாட்டு போரால் உருக்குலையும் மியான்மாரில் நிலநடுக்க கோரம்!

நீ உருவாகி பிறரை உருவாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் களரி

ஆசிரியர் பீடம்

தொலைபேசி: Whats App : 077 651 0375

மின்னஞ்சல்: yarlgallery@gmail.com

முகவரி: 28/1 ஏ.வி.வீதி கொழும்புத்துறை.யாழ்ப்பாணம்

# யாழ் பல்கலைகழகம் பொன்விழாவில்....

தமிழர்களின் கலாச்சார மையமாக கருத்துருவாக்கத்தின் மூலவேராக ஈழத் திருநாட்டின் இணையில்லாத பொக்கிஷமாக வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்பாணத்தில் அமைந்துள்ள பல்கலைக்கழகம் நல்லிணக்கத்தின் பாலமாக நல்லுறவின் பலமாக சமூக பொருளாதார கலை கலாசார பன்மைத்துவத்தின் சக்தியாக யாழ் பல்கலை கழகம் பொன்விழாவில் கால்பதித்துள்ளது.

இலங்கை முழுவதும் சர்வதேசங்களிலும் கவனம் பெற்ற ஒரு பல்கலைக்கழகமாகவும் இங்கே கல்வி பயின்று வெளியேறிய மாணவர்கள் உலகம் பூராகவும் ஒரு முன்னேற்றத்தின் கருவியாக வளர்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்று சென்னால் இலங்கை தேசத்திற்கு இது பெருமையான விடயம்.

சமூகத்தில் நடக்கும் அநீதிகள் அடக்குமுறைகள் யாவற்றிற்கும் கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் முக்காலத்திற்கும் ஏற்ற ஒரு மூலவேராக பல்கலைக்கழகம் இருந்து வருகிறது இருக்க வேண்டும் திரைமறைவில் அதற்கான திட்டமிடல்கள் கருத்துருவாக்கங்களை பெரும் தகைகள் செய்தாக வேண்டும் தீர்மானிக்கின்ற சக்தியாக மாணவர் சக்தி இருக்க வேண்டும் நமது பல்கலைக்கழக மாணவர்கள் எங்களுடைய தமிழ் பிரதேசங்களுக்கு எங்களுடைய இலங்கை திருநாட்டுக்கு முன்மாதிரிகையானவர்களாக தங்களை தகவமைத்துக் கொள்ள வேண்டும் இன்று கல்வியிலே மொழி புலமை குறிப்பாக பொது மொழியாகிய ஆங்கிலக் கல்வி அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. நூலக எரிப்பிற்கு முன் கல்வி தரப்படுத்தல் வருவதற்கு முன் ஆங்கிலபுலமையுள்ள தமிழர்கள் அதிகம் இருந்துள்ளார்கள் நடந்து முடிந்த போர் மற்றும்புலம்பெயர்வுகளால் பல ஆளுமைகள் வெளியேறியதன் வெற்றிடம் இன்றும் நிரப்பப்படாமல் உள்ளது அடுத்திருப்பவர்கள் இத்தகைய வெற்றிடங்களை நிரப்ப முன்வருகையும் நடந்தாகின்றது. உணர்ச்சிக்கு அல்ல அறிவுக்கு முன்னுரிமை கொடுத்தால் ஆரோக்கியமான மணிதர்களாக அவதாரமெடுக்க முடியும். நீ உருவாகி மற்றவர்களை உருவாக்கும் பயணத்தில் கால்பதித்துள்ள யாவருக்கும் சித்திரைபுதுவருட வாழ்த்துக்கள்.

# தேங்காய் உற்பத்தியில் வெள்ளை ஈயின் தாக்கம், அரசு அசமந்தம்

தேங்காய் உற்பத்தியானது வெள்ளை ஈ தாக்கத்தால் பாரிய சரிவைக் கண்டுள்ளது .ஆனால் அதனை கட்டுப்படுத்துவதில் அரசு அசமந்தப் போக்குடன் செயற்படுவதாக தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.



இலங்கையில் இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் தேங்காய் உற்பத்தி 32.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. எதிர்வரும் மாதங்களில் மேலும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் குற்றச்சாட்டு!**

தேங்காய் உற்பத்தியில் பெரும் சரிவை ஏற்படுத்தி வரும் பிரதான காரணிகளில் தென்னை மரங்களில் பரவி வருகின்ற வெள்ளை ஈக்களின் தாக்கமும் ஒன்றாக உள்ளது. ஆனால்இ வெள்ளை ஈக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இதுவரையில் அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை எடுக்காமல் அசமந்தமாக உள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.



தென்னை மரங்களில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வெள்ளை ஈக்களின் தாக்கம் தேங்காய் உற்பத்தியைப் பாதித்து வருவது தொடர்பாகயே ஊடக அறிக்கடியில் சுட்டிக் காட்டியுள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் தமிழ் – சிங்கள மக்களின் உணவிலும் பண்பாட்டிலும் பிரதான இடத்தைப் பிடித்திருக்கின்ற தேங்காய்கள் ஏற்றுமதியின் மூலம் நாட்டுக்குக் கணிசமான அந்நிய செலாவணியையும் ஈட்டித்தருகின்றன. உற்பத்தியாகும் தேங்காய்கள் மூன்றில் இரண்டு பங்கு உள்ளூரில் நுகரப்படஇ மூன்றில் ஒருபாகம் உலர்ந்த தேங்காய்த் துருவல்களாகவும்இ தேங்காய் எண்ணையாகவும் மதிப்புக்கூட்டி ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவற்றுக்கென ஆண்டுக்கு 4 பில்லியன் தேங்காய்கள் தேவைப்படும் நிலையில் தற்போது 3 பில்லியன் தேங்காய்கள் வரையிலேயே அறுவடை செய்யப்படுவதாகத் தெங்கு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.


இலங்கையில் தென்னையுடன் தொடர்புபட்ட இன்னுமொரு அமைப்பான தென்னை ஆராய்ச்சி நிறுவனம் அடுத்த 2026ஆம் ஆண்டில் சுமார் நூறு மில்லியன் தேங்காய்களுக்குப் பற்றாக்குறைவு ஏற்படும் என்று தெரிவித்திருக்கிறது.

பற்றாக்குறைகளை ஈடுசெய்வதற்காகத் தேங்காய்ப்பால் உலர்ந்த தேங்காய்த் தூள்இ குளிர்ந்த தேங்காய்க்கூழ் ஆகியவனவற்றை இறக்குமதி செய்ய அ செய்ய அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறது.

இதனால் அதிகம் பாதிக்கப் படப்போவது பொருளாதாரரீதியாகப் பிந்தங்கியுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற ஏழை எளிய மக்கள் தம் வீட்டு வளவுகளில் உள்ள தென்னைமரங்களை உணவாதாரமாகவும் வாழ்வாதாரமாகவும் பயன்படுத்திவந்த மக்கள் இன்று அம்மரங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளை ஈக்களின் தாக்கத்தால் தேங்காயைச் சொட்டாகப் பயன்படுத்தும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். பெருமெடுப்பில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை முன்னெடுத்து வரும் அரசாங்கம் குப்பை கூழங்களையும் சுவரொட்டிகளையும் அகற்றுவதோடு நிற்காமல் வெள்ளை ஈக்களை அகற்றித் தென்னையைச் சுத்தம் செய்வதையும் வதையும் அத்திட்டத்தில் உள்வாங்கவேண்டும். விரைந்து செயற்படாவிடின் வீட்டினதும் நாட்டினதும் தெங்குப் பொருளாதாரம் மென்மேலும் வீழ்ச்சியடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்

## பிரதமர் மோடியிடம் கோரிக்கை..!



யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆதரவை கோரியுள்ளதாக இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான் சனத் ஜெயசூர்யா தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமருக்கும் 1996 உலகக் கோப்பை வென்ற இலங்கை கிரிக்கெட் அணி உறுப்பினர்களுக்கும் இடையே கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின் போது ஜெயசூர்யா இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சமூக ஊடகங்களில், இந்த சந்திப்பை 'உண்மையிலேயே மறக்கமுடியாத மற்றும் ஊக்கமளிக்கும் அனுபவம்' என்று விவரித்த ஜெயசூர்யா, சவாலான காலங்களில் இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து அளித்து வரும் ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் முன்மொழியப்பட்டுள்ள மைதானம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கிரிக்கெட்டை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN-2613-828X

வாரமலர்

# யாழ் களரி

yarlgallery@gmail.com

உதயம் : 06 | 06.04.2025 - 14-04-2025 | களரி: 43

# உண்மையான வலுவூட்டல் கல்வியினூடாகத்தான் நடக்கும்



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராசா யாழ்களரிக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்**

**? யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஒட்டுமொத்த மாணவர்களின் எண்ணிக்கை? அவர்களுக்கு பிரச்சனைகள் இல்லாமல் கல்வியை தொடர்வதற்கு தேவையான வசதிகள் பல்கலைக்கழகத்தில் உள்ளதா?**

வருடா வருடம் 6000 மில்லியன் பொதுமக்களின் காசு கவுமண்டுகுள்ளால வருகுது. பல்கலைக்கழகத்தில் கற்கை நெறிகள் ஊடாக 100 மில்லியன் சேமிக்கின்றோம். உலகத்தில் உள்ள தனவந்தர்களும் கொடையாளிகளும் நல்ல விதமாக நிதி முறைமைகளை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். மாணவர்களுக்கான நிதி உதவி ஏற்பாடுகளை செய்துள்ளார்கள். துணைவேந்தர் நிதியம் உட்பட 80க்கும் மேற்பட்ட நிதியங்கள் உள்ளது. பாரிய இடர்கள் இல்லாமல் நடத்திக் கொண்டு போறம். மூலப் பொருட்களுக்கு போர்க்காலத்தில் சரியான கஷ்டப்பட்டனாங்கள். பொருளாதார பின்னடைவிலும் மிக நுணுக்கமாக நடந்த வேண்டியுள்ளது. எந்தக் குறையும் இல்லாமல் கற்கை நெறிகளை நடத்தி மாணவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். 50 ஆயிரம் மாணவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். நாங்கள் சூழ்ந்து இருக்கின்ற சமூகம் ஒரு கல்விசார் சமூகம் என்றபடியால் அந்த சமூகம் மாணவர்களுக்கான பெரும் வளங்கள் வசதிகளை செய்து வருவதால் தின்னவேலி யாழ்ப்பாணத்தில் பெரிய நகரமாக விரிந்துள்ளது. பொன்விழா ஆண்டு நடக்கின்றது. பல்கலைக்கழகம் ஒரு கலைக்கோவில். மக்களுக்கும் சிறப்பு, மாணவர்களுக்கும் சிறப்பு, இது இலங்கை பிரதேசத்திற்கு வளம்.

நேர்கண்டவர்:
ஜோ.ஜெஸ்ரின்

**? நாட்டின் கவனத்தை ஈர்த்த பல்கலைக்கழகமாக நிர்வாகத்தில் என்ன மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்?, என்ன என்ன பிரிவுகள் வளர்ச்சியடைய வேண்டும்?**

பல்கலைக்கழகத்திற்கு நோக்கு இருக்கிறது, தூரநோக்கு இருக்கிறது ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை திட்டமிடல். அதில் மாணவர்களை பயிற்றுவித்து பட்டதாரியாக்குதல், 12 பீடங்களுக்கூடாக இதை செய்கின்றோம். இலங்கையில் யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் 12 பீடங்கள் உள்ளது. சித்த வைத்தியம், மேற்கத்திய வைத்தியம், ராமநாதன் நுண்கலைபீடம், ஆற்றுகை பீடம், சித்திரவடிவமைப்பு உலகத்திலேயே இந்து கற்கை பீடம் யாழ்ப்பாணத்தில்தான் இருக்கு. கலைப்பீடம் 17 துறைகளோடு மிகவும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. மியூசியம் திறந்து வைத்திருக்கிறம். பேராசிரியர் புஷ்பரட்டிணத்தின் பங்களிப்பு முக்கியமானது. அவர் பல்கலைக்கழகத்தின் முதலாவது தொகுதி மாணவர் பல முதுசங்கங்களை தேடி ஒரு லட்சத்து 30 ஆயிரம் டொலர் நிதியை எடுத்து நூதன சாலையை அமைத்து வைத்திருக்கின்றார். பூர்வீக சொத்துக்கள், எமது சரித்திரம்,தமிழ் தொல்லியல் வரலாறு முக்கியம். அண்மையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழா ஒரு அமர்வில் 4000 பேர் வெளியேறியவர்கள்.



சமூக விஞ்ஞானம் தான் நவீன காலத்தில் முக்கியமானது. அரசியல் விஞ்ஞானம்,புவியியல், சமூகவியல், மானுடவியல் போன்ற பொறியியல் கல்வியில் ஆதி மூலமாக இருந்தவர்கள் தமிழர்கள். 83 கலவரத்திற்கு பிறகு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கும் போது பேராதெனிய, கொழும்பு பல்கலைக்கழக சிறப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

பேராசிரியர் வித்தியானந்தன், கைலாசபதி, இந்திரபாலா பேராசிரியர் குணரட்ணம், கணேசலிங்கம் இப்படி பல ஜாம்பவான்கள் வந்து தொடங்கி வைத்தார்கள். எந்த ஒரு நிறுவனத்திற்கும் தொடக்கம் முக்கியம். இப்ப நவீன பல்கலைக்கழகங்கள் தொடங்குகின்றார்கள். மூல வளங்கள் குறைவு. யாழ்ப்பாணக் கல்லூரி, பரமேஸ்வரா கல்லூரியில் தொடங்கினாலும் இதில் சேர்ந்தவர்கள் மிகவும் புகழ்பெற்றவர்கள்.

கல்வி என்பது ஒரு தர்மம் தர்மம் தலைகாக்கின்றது. சமூகத்தை காக்கும். குடும்பத்தை காக்கும். ஏன் ஒரு நாட்டை காக்கும். உலகத்தையே காக்கும். தர்மம் இருப்பை நிலை நாட்டுவது தர்மங்களில் வித்யா தர்மம் சிறந்தது. வித்யா தர்மத்தை உருவாக்கியவர்கள் செய்த தியாகம் அவர்கள் வடிவமைத்த கோவைகள் இப்பொழுதும் பயன்படுகின்றது.

**? தற்போது பெரும்பாலும் சிங்கள மாணவர்கள் யாழ்ப்பாண கல்வியில் பயில வாய்ப்பு கிடைத்திருக்கும் சூழலில் ஒற்றுமை நல்லிணக்கத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

நல்லிணக்கம் சிறப்பு, சிங்கள மாணவர்கள் தங்களில் படிப்பில் கவனமாக இருக்கின்றார்கள், அவர்களில் நாட்டுப்புறத்து மாணவர்கள் அதிகம் வருகிறார்கள். பொருளாதார நடவடிக்கைகளுக்கு பிறகு மூவின மாணவர்களும் இணைந்து உள்ளார்கள்.

யாழ்., பல்கலைக்கழகம் நல்லிணக்கத்திற்கு மிகவும் ஏதுவான இடம் கலைப்பீடம் தவிர்த்து ஏனைய பீடங்களில் 50 க்கு 50 இருக்கின்றார்கள், புரிந்துணர்வுடன் இருக்கின்றார்கள், இடையில் வருகிற சின்ன குழப்பங்கள் அவயின்ற மாணவர்களும் கிடையில வாறது. தமிழ், சிங்களம் என்று பிரச்சினைகள் இதுவரையில் வந்தது இல்லை. முஸ்லிம் மாணவர்களும் சந்தோஷமா இருக்கிறார்கள், பல்சமய விழாக்கள் சிறப்பாக நடக்கின்றது.

யாழ்ப்பாணத்து கலாசார பின்னணி, பண்பாட்டு பின்னணியை சிங்கள மாணவர்களின் பெற்றோர்களும் விரும்புகின்றார்கள். நல்ல ஒரு நாகரீக பின்னணி இருக்கு. மாணவர்கள் பலர் விரும்பி வருகிறார்கள். இலங்கையில் சனத்தொகையில் 75 வீதம் சிங்களவர்கள். பல்கலைக்கழக இடங்களை நிரப்ப இங்கே ஆட்கள் இல்லை. கலப்பு காதல் அப்படி ஒன்றும் இல்லை. அவர்களுக்குள் சில நடத்தைகள் வித்தியாசமாக இருக்கும். ஒப்பிட்டு பார்க்கும்போது சிங்கள மாணவர்களிடம் போதைப் பழக்கம் கொஞ்சம் கூட அவர்கள் தமிழ் மாணவர்களுக்கு வழங்குவதும் இல்லை. இரு மாணவர்களுக்கும் சேர்ந்து

மிகுதி 04 பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டியாக தமிழ் சிங்கள கலாசாரம் இரு பகுதிக்கும் பகிரப்படுகின்றது

விளையாடுவார்கள், சிங்கள மாணவர்கள் விளையாட்டில் தரமாக இருக்கிறார்கள். திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற நிலையில் நாங்கள் அங்க போக தேவையில்லை. அவர்களுடைய கலைகலாச்சாரத்தை நாம் இங்கிருந்தே தரிசிக்க முடியும். சம்பிரதாய நடவடிக்கைகள் நல்லம். வணக்கம் சொல்லும் முறைகள் நிகழ்வுகளில் பண்பாட்டு ஆடைகள் அணிதல் மிகவும் சிறப்பு. சிங்கள மாணவர்கள் தங்களது நடைமுறைகளை காட்டிக் கொள்ள விரும்புகினம். அதற்கு போட்டியாக தமிழ் மாணவர்களும் எல்லாம் செய்து கொண்டிருக்கின்றார்கள். போட்டியாக இரண்டு கலாசாரமும் இரு பகுதிக்கும் பகிரப்படுகின்றது இந்த மேம்பட்டுத் தான் இருக்கிறது.

**? யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வி நடவடிக்கையில் மொழிச்சிக்கல் இருக்கிறதா?**

இருக்குது. கலைப்பீடத்தை, சித்த வைத்தியத்தை தவிர சட்டத்துறையில் இருந்து ஏனைய பாடங்கள் ஆங்கில மொழி மூலம் தான் கற்பித்தல் நடக்கின்றது. அந்த கற்பித்தலை மாணவர்கள் முழுக்க முழுக்க கிரகிக்கிறார்கள் என்பது ஒரு கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயம். அந்த கற்பித்தல் முழுமையாக போய்ச்சேர மொழி ஆளுமை வேணும்.

இலங்கையின்ற கிராமப்புறங்களில் இருந்து தான் 70 வீதமான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வருகிறார்கள். இவர்களுக்கு மொழி ஆளுமை குறைவு தான் என்பதை விட சரியான நிலையில இல்லை. அதால கஷ்டப்படுகிறார்கள். மருத்துவம் பொறியியல் துறைகளிலும் மொழியாற்றல் குறைவதால் வெளிப்படுத்துதல் குறைவாக இருக்கின்றது. இலங்கையில் கல்வி முறையில ஆங்கிலத் தகைமை கேள்விக்குறியாக இருக்கிறது. அதனால் கிராமப்புற பிள்ளைகள் அழுத்தத்திற்கு உள்ளாகின்றார்கள்.

**? சமீபத்தில் பல்கலைக்கழகத்தில் ஒழுங்கு நடவடிக்கை குறித்து கலைபீடத்தின் பீடாதிபதி மற்றும் நிர்வாகத்தினரிடையே பிரச்சனைக்குரிய சூழல் உருவாகியது தற்போதைய நிலை என்ன?**

20 ஆயிரம் மாணவர்கள் 2000 பணியாளர்கள் இருக்கும்போது நிச்சயமாக ஒழுக்காற்று பிரச்சினைகள் வரும். சமூகத்தில் எல்லோரும் ஒரே மாதிரியில்லை. நாங்கள் கையாளுகின்ற மாணவர்கள் கட்டிளமை பருவத்திற்குரியவர்கள். வீட்டை விட்டு இங்கு வந்து செயல்படும்போது நிறைய ஒழுக்கம் சம்பந்தமான கட்டுக்கோப்புக்குள்ள வைத்திருப்பது மிகப்பெரும் சவால். போருக்கு பிந்திய காலங்களில் சினிமா பாணியில் பல விடயங்களை செய்ய முனைகிறார்கள். முரட்டு தன்மையை இயல்பான தன்மை என கருதபார்க்கிறார்கள். சமூக வலைத்தளங்கள் உதாரணமாக ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களை பாருங்கள் மொழியாற்றல் பண்பு.



**மருத்துவம் பொறியியல் துறைகளிலும் மொழியாற்றல் குறைவதால் வெளிப்படுத்துதல் குறைவாக இருக்கின்றது. இலங்கையில் கல்வி முறையில் ஆங்கிலத் தகைமை கேள்விக்குறியாக இருக்கிறது. அதனால் கிராமப்புற பிள்ளைகள் அழுத்தத்திற்கு உள்ளாகின்றார்கள்.**

இல்லாமல் இருக்கின்றது. ஆசிரியர் மாணவர் உறவு வந்து சிறப்பாக தான் இருக்கின்றது. பல்கலைக்கழகம் ஒரு குடும்பம். குடும்பத்தில் பிரச்சினைகள் வரத்தான் செய்யும் பல்கலைக்கழகத்தின் நடைமுறைகள் பாதிக்கப்படாமல் இயக்கம் பாதிக்கப்படாமல் முடிவுகளை இரண்டு பக்கமும் சார்ந்து சமாளித்து போக வேண்டும். வித்தியாசமான அணுகுமுறையில இயங்கிக் கொண்டு போகின்றோம். விமர்சனங்கள் வரும். இவர் என்ன விட்டு கொடுக்கிறார். டபுள் கேம்



போடுறார் என்பார்கள். கிருஷ்ணர் சொல்கிறார் பலனை எதிர்பாராமல் காரியத்தை செய் எமது பணி பல்கலைக்கழகத்தின் சாரதி ஆசனத்தில் இருக்கின்றேன். பார்த்தசாரதி மாதிரி இயங்கிக் கொண்டு போறதே ஒழிய இயங்கிக் கொண்டு போகும்போது கிருஷ்ணனுக்கே பழிகள் வந்தது குறிப்பிட்ட மாணவர்களால பெரும் பகுதி மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு சில பழிகள் வந்தாலும் முரண்பாடுகள் வந்தாலும் யாழ்., பல்கலைக்

கழகத்தை முன்னுக்கு போக வேண்டும் என்பதற்காக முடிவுகளை எடுப்போம். சில விடயங்கள் கலைப்பீடத்துக்கு பிடிக்காமல் இருக்கும் சில விடயங்கள் மாணவர்களுக்கு பிடிக்காமல் இருக்கும் ஆனால் அதை ஒருங்கிணைத்து வென்று கொண்டு தான் போகின்றேன். அண்மையில் ஒரு மாணவன்மேல் நீதிமன்றத்தில் வழக்கு போட்டான். வாதாடுறது கோர்ட்டுக்கு போறது சக்தி விரயம். சமரசமாய் அவர்கள் கேட்பதை செய்வோம் என்று அதை அவர்கள் தொடர்ந்து முன்னெடுக்க போகிறார்கள் என்றால் இனி அவர்களின் விருப்பம். ஆனால் எமது மாணவனை கருத்தில் கொண்டு சக்தி விரயத்தை சிதறடிக்காமல் சில முடிவுகளை எடுக்கிறோம். அதை சில நேரம் பத்திரிகைகள் விமர்சிக்கிறார்கள். இது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் துணைவருக்கும் உள்ள பிரச்சினை நடைமுறை பிரச்சனை. கலை பீடாதிபதி பெரிய மனத்தோடு இவற்றை தாங்கிக் கொண்டிருக்கிறார்.

அதேபோல மாணவனும் தனது கற்கையை பாதிக்கப்படாமல் பிடித்துக் கொண்டிருக்கிறார். நாட்டில் எத்தனை பிரச்சனை இருக்கு இது சமரசமாய் தீர்க்கலாம் தானே. செம்மையான நிர்வாகத்தை செய்யும்போது விமர்சனங்களுக்கு அப்பால் செயல்பட வேண்டியிருக்கும். கோடு போட்டு நடக்கேலாது. முழு நோக்கம் நிறைவேற வேண்டும். பல்கலைக்கழகம் நடக்குதா? மாணவர்கள் படிக்கின்றார்களா? என்பதே முக்கியம்.

பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம் தீராத கோபம் யாருக்கு லாபம் என்று மாணவர்கள் ஆசிரியர்களுக்கு தண்டனை அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்க இயலாது.

திருந்துவதற்கு ஏற்ற நடைமுறைகளை பயன்படுத்தி இயங்க பார்க்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் பெரிய பெரிய ஆட்களின்ர மக்கள் எல்லாம் குற்றங்களில சிக்கும் போது இவர்கள் போய் தங்களின் செல்வாக்கை பாவித்து தங்களது மக்களை மீட்டுக் கொண்டு வருகிறார்கள். ஆனால் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவனை குற்றம் கண்டவுடன் தண்டனையை கொடு என்கிறார்கள் யோசித்துப் பார்க்க வேண்டும் எங்கட பிள்ளைக்கு இப்படி நடந்தால் முழு தண்டனையை கொடுத்து அவனது வாழ்க்கையை நாசமாக்க மாட்டோம். விமர்சனங்களுக்கு பயந்து கருணையை நாங்கள் விடேலாது. தவிர்க்கலாம் அதன் அடிப்படையில்தான் நாங்கள் செயற்படுகின்றோம். அரசியல் கைதிகள் தியாக அடிப்படையில் போனாலும்

இன்னொருத்தன் கூட்டிக்கொண்டே வச்சிருக்கிறது பிழை என்றுதானே சொல்லுகின்றோம். அவனுடைய சட்டத்தின்படி பிழை என்றாலும் எங்களுடைய சட்டத்தின்படி நியாயம் தானே. ஒருவரின் சாப்பாடு இன்னொருவருக்கு நஞ்சு. 50 வருடத்தில் நாம் ஒரு மாணவரையும் கருக விடவில்லை. அவர்களை ஆளாக்கியிருக்கின்றோம்.

எத்தனை பேரை ஸ்ரீலங்கா நடைமுறைக்கு குற்றவாளியாக காண்பார்கள். ஏதோ ஒரு வகையில அவர்களை காத்து படிப்பித்து வெளியில விடுகின்றோம் தானே. அண்மையில கூட சுதந்திர தினத்தில் கொடியை இறக்கினார்கள். அது எவ்வளவு பெரிய பிரச்சினை கொடியை இறக்கின பிள்ளைகளுக்கு நான் சொல்லுறேன் வா இந்தியாவுல கொண்டு போய் விடுகிறேன். கொடிய இறக்கிப் போட்டு நீ எப்படி இங்கே இருப்பது பல்கலைக்கழகத்தின் நன்மைக்காக புலனாய்வாளர்களுடன் கதைத்து சமரசத்துக்கு போய் தான் தீர்க்கின்றோம்.

**? பகிடிவதை சட்டத்தினால் தடை செய்யப்பட்டிருந்தாலும் உண்மையில் பகிடி வதையினால் மாணவர் ஒருவர் பாதிக்கப்பட்ட செய்திகள் வந்தது, இந்த சூழ்நிலையை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பகிடிவதை பொதுவாக யாழ்ப்பாணத்தில் குறைந்து போச்சுது என்றாலும் பிற மாவட்ட மாணவர்கள் ஏனைய மாணவர்களை சமூக வலைத்தளங்களுக்கு உள்ளாள் வரவழைத்து பல்கலைக்கழகத்திற்கு வெளியில் கொண்டு போகின்றார்கள். சில விதமான பாவனை பொருட்களை பாவிப்பவர்களாக இருந்தால் போதை என்று சொல்ல விருப்பமில்லை. அவர்களுக்கு அந்த நேரம் என்ன செய்வது என்று தெரியவில்லை உடன் கோபம் வந்து ஒரு விதமாக இயங்குகிறார்கள், பிறகுதான் தெரியுது தான் பெரிய பாதிப்பை செய்து விட்டேன் என்று. பெடியனுக்கு அடிச்ச பிரச்சனை இலங்கை முழுவதும் பெரிய பிரச்சினையாய் போச்சுது. அடிச்சவரை வெளியிட போட்டாச்சு. ஆகக் குறைந்தது இரண்டு வருடம் உள்ளே வர முடியாது.

அவயின்ற வாழ்க்கை சரி ஏற்கனவே நாலைந்து பேர் தொழில்நுட்ப பீடத்தில் இருக்கினம். இப்பதான் மீள வருகினம். உள்ளுக்கு நாங்களும் போட்டுக் கொண்டு இருக்கிறம். இது நடந்து கொண்டு தான் இருக்குது. காரணம் இப்ப மதுபாவனை, போதை பாவனை சில மாணவரிடம் இருக்கு. பூநகரியிலிருந்து வந்த அச்சுவேலி ஆசிரியரை தனக்கிளப்பில அடித்து கொலை செய்திருக்கிறார்கள். காரணம் போதை. சங்கு வேலி வெளி, செம்மணி வெளி போன்ற வெளிகள் இருப்பது போல பல்கலைக்கழகத்திலையும் சில வெளிகள் இருக்குது. சூனிய பிரதேசம் மாதிரி இங்கு இத்தகைய குழுமங்கள் இருக்குது. யாழ்ப்பாணத்தில சில அரைகளில் செய்படுகுது.

05 ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்கு பிந்திய காலங்களில் சினிமா பாணியில் பல விடயங்களை செய்ய முனைகிறார்கள்

அந்த பெடியனுக்கு அடித்த பின்னர் நாங்கள் மருத்துவமனையில் கொண்டு போய் விட்டனாங்கள். அங்கு பொலிஸ் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பேரினத்தை சேர்ந்த மாணவர் என்று சமாளிக்க பார்க்கிறார்கள், அரசாங்கம் சொல்லுது துணைவேந்தர் நீ கவனி, பெற்றோர்களும் நீ கவனி என்கிறார்கள் . முழு பொறுப்பும் எங்களிடம் தான் வந்து சேருது. நான் கவனிக்க தயார் பல்கலைக்கழகத்தின் சாரதியாக இருக்கின்றபடியால் வியக்கத்தக்க விடயம் என்னவென்றால் எனக்கு மேலே உள்ள எல்லோரும் விமர்சிக்கிறார்கள். சட்டத்துறை நீதித்துறை இல்லையா அடித்தவனை அவன் சொல்கிறான் முறைப்பாடு செய்துள்ளான். யுயுசி, மினிஸ்ரி, எல்லாத்துலயும் முறைப்பாடு செய்திருக்கின்றான் யாரும் ஒன்றும் செய்யவில்லை துணைவேந்தருக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அந்தப் பொறுப்பை நான் நிறைவேற்ற தயார். ஆனால் என்னத்துக்கு அந்த துறைகள் எல்லாம் இருக்குது எவருக்கும் அந்த பொறுப்பை எடுக்க விருப்பமில்லை அண்மையில் பட்டமளிப்பு விழாவில் வெடிப்போட்டது. மோட்டார் சைக்கிளில் சுற்றியது என்று சொல்கிறார்கள். பிக்மச்சில் என்ன நடக்குது. ஒரு நாள் நிகழ்வு என்று சமூகம் அதை கண்டு கொள்ளாமல் இருக்குது. முந்தி பட்டமளிப்பு விழா அப்படி நடப்பதில்லை. ஆசிரியர் சங்கம் அதை இப்ப சொல்லி இருக்குது. அதை நான் தவிர்க்கிறதுக்கான நடவடிக்கை இருக்கின்றேன். இந்த கலாச்சாரம் ஒன்று இளைஞர் மத்தில இருக்குது. பிக்மைச்சில வீதி வீதியாக வாத்தியங்களை சத்தம் பேப்டி திரிகின்றது. அதை பொலிஸாரும் கண்டுகொள்வதில்லை. பல்கலைக்கழகம் இதற்கு எதிர்காலத்தில் முன்மாதிரியாக இருக்கும். இனப் பிரச்சினையின் ஆரம்ப காலங்களில் நடந்த கொலைகள் எல்லாம் உணர்ச்சியில நடந்த கொலைகள். தவிர்த்து இருக்கலாம். திடீர் முடிவுகளை தவிர்த்து இருந்தால் கூட மேம்பட்டிருப்போம். அதுபோல பல்கலைக்கழகத்தில் துன்பியல் நிகழ்வு நடந்தால் அதை நாங்கள் அவதானமாக கையாண்டு மீண்டு வர வேண்டும். உண்மையான மனமாற்றத்தை கொண்டுவர பொறுமையை மேற்கொள்ள வேண்டும். தண்டனை முக்கியம் ஆனால் முரட்டுத்தனமான அதே தண்டனையாக இருக்கக் கூடாது. இந்திய படம் மாதிரி இருக்க இயலாது.

**? பல்கலைக்கழக மாணவர்கள் கட்சி அரசியலில் ஈடுபடுவது குறித்து உங்கள் கருத்து என்ன?**

இது பெரிதாக இல்லை. எங்கள் அரசியலைப் பொறுத்தவரையில் உள்கட்சிகள் சரியான பலவீனம். கட்சி தானே தன்ற நிர்வாகங்களை அமைக்கேலாமல் இருக்குது. பல கட்சிகள் உடைஞ்சு போச்சு. உதுக்கு பின்னாலே ஒருத்தரும் இல்லை. பல்கலைக்கழக மாணவர்களை சில குழுமங்களாக சிலர் இயங்குகின்றார்கள். ஆர்வக் குழுக்கள் அந்த குழுமம் மக்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய விடயங்களில் மக்களின் பாராட்டை பெறுவதற்காக இயங்குகிறார்கள். பல்கலைக்கழகத்தை பொறுத்த வரையில் நெருக்கடிகள் அடக்குமுறைகளுக்கு எப்பவும் குரல் கொடுக்கும் பல்கலைக்கழகமாகத்தான் எப்பவும் இருந்திருக்கு. தொடர்ந்து அந்த நடைமுறைகளை எல்லா மாணவர்களும் பேணுகிறார்கள். கூட கலைப்பீடம் மாணவர்களில் அது ஒன்றியிருக்கு. ஏனைய மாணவர்களும் அதில சிறப்பாய் இருக்கிறார்கள். எங்களுடைய பிரதேச மக்களுடைய சுதந்திர பொருளாதார அடக்குமுறைகளுக்கு எதிரான பாகுபாட்டுக்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள். அந்த அரசியல் விஞ்ஞான ஆசிரியர்கள் ஆய்வுகள் செய்வார்கள், சமூகவியல்துறை, தமிழ் துறை போன்றவை இருக்குது. நெருக்கடி சம்பந்தமான கருத்து உருவாக்கம் செய்வார்கள்.

பண்பாட்டுக் கோலங்கள் வாழ்வியல் அரசியல் மொழி சம்பந்தப்பட்ட விடயங்களில் அறிவு சார் பங்களிப்பு செலுத்த வேண்டிய தன்மை எங்களின் நோக்கு- தூரநோக்கில் இருக்கின்றது.

கருத்துருவாக்கத்தில் மாணவர்கள் செழுமையாக ஈடுபடுகின்றார்கள். கட்சி அரசியல் இல்லை. அறிவியல் சம்பந்தப்பட்ட பங்களிப்புதான் கூட பல்கலைக்கழகத்துக்குள் வெளிப்படையாய் எந்த கட்சியும் இல்லை. சில மாணவர்கள் இருப்பார்கள். குழுமங்கள் இருக்கும். எங்கள் யூனியனுக்குள்ள இல்லை.

ஆரம்ப காலங்களில் பேராதனியாவில் இடதுசாரி கட்சிகள் நேரடியாக பல்கலைக்கழகத்திற்குள்ள இருக்கும். எல்லா கட்சிகளும் இருக்கும் இங்கு அப்படி இல்லை.

**? சுதந்திர தினத்தன்று யாழ்., பல்கலைக்கழகத்துடன் கறுப்புக்கொடி கட்டப்பட்ட விடயம் பேசப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக உங்கள் கருத்து?**

கறுப்புக் கொடி கட்டுவது உரிமைதானே. 83 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தில கொழும்பில் பேராசிரியர் கறுப்பு உடை அணிந்து போய் எதிர்ப்பு தெரிவித்தார். கறுப்பு கட்டுவது எதிர்ப்புதான். உலகம் முழுவதும் இது நடைமுறையானது தான். தேசிய கொடியில கை வைக்கிறது நாட்டுக்கு ஏற்காது. கறுப்புக்கொடி யாரும் கட்டலாம். நாட்டின் அரகல நடந்து தானே எதிர்ப்பு தெரிவிப்பதை உலகம் முழுவதும் வரவேற்கின்றார்கள் தானே. இன்னொரு சமூகத்தை நாங்கள் அவமதிக்க இயலாது. முள்ளிகால்வாய் நினைவுநாள் வரும், ஜூலை கலவரம் நினைவுநாள் வரும். உண்மையிலே 81ல் நூலகம் எரிப்பு, 83 தமிழாராட்சி மாநாடு கொலைகள் எல்லாவற்றுக்கும் நாங்கள் எதிர்ப்பு தெரிவித்து கறுப்பு கட்டத்தானே வேண்டும். இது ஒரு வெளிப்பாடு. எதிர்ப்பை தெரிவிப்பதன் மூலம் உள்ளக் குமுறல் குறையும் தேசிய பல்கலைக்கழகம் என்ற வகையில் நாங்கள் அதை ஊக்குவிக்க மாட்டோம். அப்படி கட்டினாலும் பெருசா எங்கள் அணுகுமுறைகள் அதில் இருக்காது.





**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நல்லிணக்கத்திற்கு மிகவும் ஏதுவான இடம் கலைப்பீடம் தவிர்த்து ஏனைய பீடங்களில் 50 க்கு 50 இருக்கின்றார்கள், புரிந்துணர்வுடன் இருக்கின்றார்கள், இடையில் வருகிற சின்ன குழப்பங்கள் அவயின்ற மாணவர்களுக்கு இடையில் வாரது. தமிழ், சிங்களம் என்று பிரச்சினைகள் இதுவரையில் வந்தது இல்லை. முஸ்லிம் மாணவர்களும் சந்தோமாக இருக்கிறார்கள், பல்சமய விழாக்கள் சிறப்பாக நடக்கின்றது.**

**? யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு வெளிநாட்டு தமிழர் ஆதரவு எவ்வாறு உள்ளது?**

வெளிநாட்டு தமிழர்களின் பிறப்பிடம் இங்குதான் இருக்குது. யாழ்ப்பாணம் தான் மொழியையும் வாழ்வியலையும் பேணுது. எல்லோருக்கும் இங்கு வந்து போகத்தான் விருப்பம். தங்கள் உறவுகள் வந்து நலிந்து போவதை விரும்ப மாட்டார்கள். அவர்களுக்கு தெரியும் 21 ஆம் நூற்றாண்டு அறிவுசார் சமுதாயம் தான் முக்கியம். உண்மையான வலுவூட்டல் கல்வியின் ஊடாகத்தான் நடக்கும். எங்கள் பீடங்களில் படிக்கும் மாணவர்கள் கிராமங்களில் இருந்து வந்தவர்கள் அவர்களுக்கு வலுவூட்டுவது இவர்களுக்கு விருப்பம்.

ஒருவனுக்கு உணவு கொடுப்பதை விட வித்தையை கற்றுக் கொடுப்பதுதான் முக்கியம். அவர்களும் உதவி செய்யும் போது கூட பல்கலைக்கழகம் பாடசாலை கல்வி நிறுவனம் ஆலயம் ஆகியவற்றுக்கு உதவ விரும்புவார்கள். நாளாந்த பிரச்சினை தீர்க்கிறதாகவும் இருக்கும் வலுவூட்டல் சமூக மேம்பாடு பொருளாதார உண்மையான மேம்பாடு நடக்கும். இங்கு கல்வி கற்று அங்கு போனவர்களுக்கு அது தெரியும்.

பாத்திரம் அறிந்து தானம் செய் என்று பரமனே சொல்லியிருக்கின்றார். இங்கு கொண்டு வந்து உதவிசெய்தால் நன்றிக்கூடும் பொறுப்புக்கூடும். தங்கள் உறவுகள் செம்மையாக இருக்க அவர்கள் செய்கிறார்கள். பல்கலைக்கழகத்துக்கும் நிறைந்த உதவிகளை செய்கின்றார்கள் திடகாத்திரமான முறையில் எங்கள் நலச் சேவை பிரிவால் அது பேணப்படுவது வேற இடங்களில் கொடுப்பதற்கு ஐயங்கள் வரலாம். எங்களின் நடைமுறைகள் மிகவும் சிறப்பாக இருக்கின்றபடியால் நாங்கள் விளம்பரத்திற்காக எதையுமே செய்வதில்லை. வெளியில போட்டு காட்டுவதில்லை . தவக்காலத்தில் இயேசுநாதர் சொல்கிறார் வலக்கை கொடுப்பது இடக்கைக்கு தெரியக்கூடாது என்று நன்கொடை தந்தவருக்குரிய மதிப்புச் சான்று கொடுக்கின்றோம்.

**? தற்போதைய அரசாங்கத்தின் கல்வி கொள்கைகள் குறித்து உங்கள் கருத்து?**

தற்போதைய அரசாங்கம் சீரியஸாக யோசிக்குது, நடைமுறைகளுக்குள்ளால செழுமையை கொண்டு வர வேண்டுமென்று - எந்த நாட்டை எடுத்தாலும் கல்வியில் நடு மையம் ஒன்றுதான். மொழி -கணிதம் -தர்க்கம்- சுயசிந்தனை கிருட்டிகள் சிந்தனை, தரவுகள் எங்கள் பிரதேச ரீதியான விஷயங்கள் அறிந்திருப்பது. கல்வியின் முறைமைகளை மாற்றலாம் நடுமையத்தை மாற்ற முடியாது. குருவும் தாரமும் தலைவிதிப்படி என்பார்கள். குரு தான் முக்கியம் யாரிடம் படிக்கிறாய் முந்தியிருந்த ஆசிரியர்கள் இப்படியான நெருக்கடிக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பல்கலைக்கழகம் சீனா சார்பு இந்தியா சார்பு என்ற தோற்றப்பாட்டை எடுக்கக் கூடாது

இருக்கவில்லை. வன்னி நிலப்பரப்பை எடுத்தால் அங்கிருக்கும் ஆசிரியர்கள் காலை 5 மணிக்கு பஸ்ஸில் ஏறுகிறார்கள். கற்பித்து விட்டு வீடு திரும்புகிறார்கள். எவ்வளவு நெருக்கடி அழுத் தங்களுக்குள்ளேயே இருக்கும் உலகம் இனுவிலில் உலகத்தின் பெரிய மஞ்சம் வைத்திருக்கிறார்கள். ஆனால், ஆரம்ப பாடசாலை வைத்திருக்க முடியாவில்லை, எல்லோரும் பொஸ்கோவுக்கு ஓடுறியல். இந்து பிறைமறிக்கு ஓடுகிறார்கள். இப்படி வடமராட்சியில் பெரிய பாடசாலை என்று ஆரம்ப பிரிவில் இல்லை. அதுசிறப்பு. பஸ்சில வருவது சிறுவர்களுக்கு பாதிப்பு. உறுதியுள்ள விளையாட்டு இல்லை, கல்வி எல்லாமே மிகவும் பழமை வாய்ந்தது. மொழி தொல்காப்பியர் காலத்தில இருந்து இருக்குது. சரித்திரம் 400 வருடத்திற்கு முற்பட்டது. கணிதம் 300 ஆண்டு பழமையானது. விஞ்ஞானம் 100 ஆண்டு பழமையானது. விஷயம் தான் முக்கியம். கிராமத்தில் படித்தால் என்ன? நகரத்தில் படித்தால் என்ன கல்வி ஒன்றுதான். அண்மையில் வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் படித்தவன் தான் இலங்கையில் முதலிடம் கலைப்பீடத்தில் முதலாவதாக வந்த பிள்ளை பண்டத்தரிப்புல செல்வபுரத்தில் வீடும் இல்லாத பிள்ளை தான். பெரிய கல்வி அதிகாரிகளின் பிள்ளைகள் படிப்பில் முன்னிலை யாவதில்லை. ரஷ்யாவிலும் பெல்ரோசிலும் படிக்கினம். தனிய ஊட்டச்சத்தால மட்டும் பிள்ளையை வல கேளாது. இயற்கை உணவு, கீரை, கிழக்கு வகைககள் முக்கியம். மேலதிக வகுப்புகளால் ஒன்றும் செய்ய இயலாது.

போரின் ஆரம்பத்தில் எங்கள் ஊரில தான் முதலாவது கரும்புலி வெடித்தது. அந்த நேரம் நான் வெளிநாட்டுல பகுதி நேரமா பெற்றோல் செற்றுக்கு போவேன், ரெஸ்ரோரண்டுக்கு போயிருக்கிறேன் தானே!. சிங்கள மாணவர்கள் எல்லாம் சுப்பர் மார்க்கற்றிலையும் வேலை செய்கிறார்கள் தானே மற்றவனை விட வேலை எடுப்பதற்கான சந்தர்ப்பம் பட்டதாரிகளுக்கு கூட இருக்குது. அதை நீ பயன்படுத்திக்கொள். பல்கலைக்கழகத்தை பொறுத்த வரையில கல்வி வலுப்படுத்தலாம். எல்லா கற்கை நெறிகளையும் ஆங்கிலம் படிப்பிக்கிறோம். IT படிப்பிக்கிறோம். அதை பயன்படுத்த வேண்டும். இலங்கையை பொறுத்த வரையில் ஆங்கிலத்திற்கு கொடுக்கிற நேர சூசியும் கணிதத்துக்கு கொடுக்கிறதும் ஒரே அளவு. ஆங்கிலத்திலே என்ன அடைவு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில ஆங்கிலம் படிக்கிறது இலகுவானது உலகப் பொது மொழியில் வடமாகாணம் பலவீனமாக உள்ளது. காரணம் அலட்சியம், ஆர்வமின்மை, பொது வலுவூட்டல் வேணும் எண்ணும் எழுத்தும் கண்ணென தகும். இன்று தமிழ்நாடு ஏன் கலக்குது. பொருளாதாரத்தில் ஆங்கிலத்தால தான் முன்னேரியிருக்குது. தமிழை விட வேண்டாம் முனிவர் தேவருக்கும் இல்லாத வரபிரசாதம் இன்டர்நெட் இதை பயன்ப



**ஒருவனுக்கு உணவு கொடுப்பதை விட வித்தையை கற்றுக் கொடுப்பதுதான் முக்கியம். அவர்களும் உதவி செய்யும் போது கூட பல்கலைக்கழகம் பாடசாலை கல்வி நிறுவனம் ஆலயம் ஆகியவற்றுக்கு உதவ விரும்புவார்கள். நாளாந்த பிரச்சினை தீர்க்கிறதாகவும் இருக்கும் வலுஹட்டல் சமூக மேம்பாடு பொருளாதார உண்மையான மேம்பாடு நடக்கும்.**

டுத்த பிள்ளைகளுக்கு ஆங்கில மொழி புரிய வேண்டும்.

பெரியவன் எதை செய்கின்றானோ அதைத்தான் சாமானியனும் செய்வான். பெரியவர்களே போலி பட்டங்களுக்கு பின்னால் போகின்றான். பணம் முக்கியமல்ல உன் ஆற்றலை வளர்க்க உனக்கு தேடல் வந்தால் குரு கிடைப்பான். புத்திஜீவிகள் சமூகத்தை விட்டு விளகி நடக்கின்றார்கள்.

**? சமீபத்தில் சீன தூதுவருடன் சந்திப்பில் சீனாவால் வழங்கப்பட்ட புலமை பரிசீலை பல்கலைக்கழகம் நிராகரித்ததாக கூறப்பட்டது?**

புலமை பரிசிலை வேண்டி போட்டம். அவரை உள்ளுக்க விடவில்லை. அவர்கள் இங்கே வர பார்பார்கள் வந்து தங்களின் அரசியல் ரீதியான பிரசன்னத்தை உருவாக்க விரும்புவார்கள். சீனர் வரும் போது அயல் நாட்டான இந்தியா போன்றவர்கள் விரும்பமாட்டார்கள். எங்களுக்கு பொதுத்தன்மை முக்கியம், அவர்கள் வரும்போது வித்தியாசமாக பார்க்கப்படுகின்றது. அவர்கள் எண்ணத்துக்கு வருகிறார்கள் என்ற ஐயப்பாடு எங்களுக்கும் இருக்கு. யாழ் பல்கலைக்கழகம் இந்தியாவின் பக்கத்தில் இருக்கு. சீனா பொதுத்தன்மையோட வந்தால் பரவாயில்லை. பூகோள அரசியல் தன்மையோடு வரும்போது இந்தியா எங்கள் உயிர் நாதத்தில் ஒன்று. மதுரைக்கு சிதம்பரத்திற்கு போறதில்லையா. அடிவருடிகள் இந்தியாவுக்கும் உள்ளனர். சீனாவுக்கும் உள்ளனர். நாங்கள் அடிவருடிகள் இல்லை. நாங்கள் இந்த முடிவு எடுப்பது இந்தியா சார்பு முடிவும் அல்ல.

எமது பல்கலைக்கழகம் சீனா சார்பு இந்தியா சார்பு என்ற தோற்றப்பாட்டை எடுக்கக்கூடாது. அவர்களின் பிரசன்னத்தை மறுக்கிறோம். அவர்கள் சாதாரண ஆட்களாக வந்து போகலாம்.

**? வடமாகணத்தில் கல்வித்துறை குறித்து உங்கள் கருத்து?**

கல்வி ஒரு நாளும் குறைகிறது இல்லை. வடமகாணத்தில் வலுவான சமூகம் மேலதட்டு நடுத்தர மேல் தட்டு வெளிநாடுகளுக்கு போட்டுது. இன்று இருப்பது அடுத்த தலைமுறை படிப்படியாகத்தான் வளர்ச்சி பெறும் ஒவ்வொரு வீட்டையும் எடுத்துப் பார்த்தால் மேம்பாடு தெரியும். ஒவ்வொரு கிராமத்தையும் எடுத்துப் பாருங்கள் முன்னேற்றம் தெரியும். நீங்கள் பத்திரிகை வெளியிடுகின்றீர்கள். முன்பு உதயதாரகை மட்டும் தான். இப்போ பல பத்திரிகைகள் பல வெளியீடுகள் வருகிறது. இதெல்லாம் கல்வித்துறையின் வளர்ச்சியை குறிக்கிறது பேராசிரியர் சிவலிங்கராசாவை எடுத்துப் பார்த்தால் அவர் 30 வயதில் பல்கலைக்கழகத்துக்கு வந்தவர். அவரது வீட்டில் நான்கு வைத்தியர்கள் இருக்கின்றனர். கல்வி உயர்ந்துகொண்டு தான் போகுது. மற்ற மாவட்டத்துடன் ஒப்பிட்டு பார்க்க முடியாது. வெள்ளவத்தை, திருகோணமலை போன்ற இலங்கையின் மாவட்டங்கள் கனடா போன்ற புலம்பெயர் நாடுகளை எடுத்துப்பார்த்தால் யாழ்ப்பாணத்தவர்கள் தான் செறிந்துள்ளனர். பில்கேட்ஸ் உடைய மகன் பணத்திற்காக படிக்க வேண்டுமா? அல்லது வேலை வாய்ப்புக்காக படிக்க வேண்டுமா? அவன் விரும்பினதை படிப்பான். கல்வி பின்னடையவில்லை. பின்னடைய முடியாது உலகம் முழுக்க வளர்ந்து கொண்டு போகும்.

படித்தவன், நிர்வாகம் செய்பவன், வியாபாரி முட்டாள் இந்த நான்கு



தட்டிலும் சமூகத்தில் மேய்ப்பர்கள் இருக்க வேண்டும். போதகர், குரு, பிராமணன் இப்படி பலர் இருக்கினம். அவர்கள் தூய்மையாய் இல்லை என்பது வேறுவிடயம். மருத்துவமனையில் போனால் பார்க்க மாட்டார்கள். தனியார் மருத்துவமனையில் போனால் பார்ப்பார்கள். இது இயல்பு. ஒரு நாளைக்கு உங்கள் பிள்ளைகளை வெளியில கொண்டு போய் காட்டுங்கள். ஆட்டோக்காரன், பேப்பர் காரர், பஸ் டிரைவர் இப்படி படிக்கும்போது கோட்டை விட்டவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். படிக்காமல் யாரும் இருக்க முடியாது. படிப்பை கோட்டை விட்டவர்களும் வேலை செய்யாமல் இருக்க முடியாது.

**? எதிர்ப்பை சவாலை வெற்றி கொள்வதற்கு கல்வித் துறையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து உங்கள் கருத்து?**

சீர்திருத்தம் என்ற பதமே பிழை. சீர்திருத்தம் ஆறுமுக நாவலர் செய்தது என்று சொல்வார்கள். இசைவடைய வேணும். பல்துறை ஆற்றல் வேணும். உபகரணங்களை பாவிக்க தெரிய வேண்டும். வசதி படுத்துனர்கள் வேண்டும். முறைமைகளை மாற்றி அமைக்க வேண்டும்.

உணவு உடை உறைவிடம் தகவல் தொழில்நுட்பம் ஆங்கிலம் இணையத்தள ஊடகம் வேண்டும். யாழ்ப்பாணத்தில் விளையாட்டு நிகழ்வுக்குப் போனால் மைதானம் முழுக்க பற்றையாக இருக்கும். மைதானம் முன்பு மைதானமாக இருந்தது. தொடர்ந்து விளையாட்டு நடந்தது. கல்வி முறையில் பிள்ளைகளை சமூகமயமாக்க வேண்டும், சான்றோர்கள் ஆவதற்கு பல அம்சங்கள் சேர்க்க வேண்டும்.

நாடுகளின் முன்னேற்றத்தில் உள்ள முதல் தரமானவற்றை நாம் பயிற்சி செய்தால் போதும். கண்டுபிடிக்க தேவையில்லை. ஜப்பான், கொரியா நல்லாட்சி செய்கிறான். அவுஸ்திரேலியா கல்வியில் வெளுத்து வாங்குகிறான். கிரிக்கெட் அடிக்கிறவன் எப்படி அடிக்கிறான் என்று பார்த்தால் அதை கற்று பயிற்சி செய்தால் சரி. விஞ்ஞானி கண்டுபிடித்ததை நாங்கள் உள்வாங்க வேண்டும். முழுமையில் பூரணத்துவம் வேண்டும். எதிர்கால சந்ததியை மேம்படுத்த வேண்டும் என்றால் உன்னதமான உள்வாங்க வேண்டும்.

நாங்கள் விட்ட பெரும் தவறு யாப்பு சரியாகவில்லை. சுதந்திர தினம் யாப்பை உருவாக்கிய தினம் இரண்டையும் இந்தியா கொண்டாடுகின்றது. மனிதனின் உன்னத நிலை வீடுபேறு வீட்டில் இருப்பது தான் நல்லது.

அது இயல்பாய் வரும் . ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற குணத்திற்காக விரும்பும். உள்ளதை உள்ள படியே அறிய கல்வி முக்கியம். படிப்பால வாறதில்லை 'ஆனந்தம்' புறத்தூய்மை சுத்தம் அகத்தூய்மை நியமம் எல்லோருக்கும் எல்லாம் செய்வது மகிழ்ச்சியாக இருக்கத்தான். ஆகவே நல்ல மனப்பாங்கு வேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு கட்சிகளின் வேட்பு மனுக்கள் உட்பட நிராகரிப்பு விவகாரம்

# உயர் நீதிமன்றத்தினால் 59 மனுக்களும் தள்ளுபடி

### விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாதிருக்கத் தீர்மானம்

உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 53 ரிட் மனுக்களும் மற்றும் 6 அடிப்படை உரிமை மனுக்களையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது தள்ளுபடி செய்வதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த குறித்த மனுக்கள் கடந்த 28ஆம் திகதி முதல் ஆராயப்பட்ட நிலையில், அது தொடர்பில் இடம்பெற்ற நீண்ட வாதப் பிரதிவாதங்களின் பின்னர் வெள்ளிக்கிழமை அது தொடர்பில் தீர்ப்பை அறிவித்த உயர்நீதிமன்றம் அந்த மனுக்களை தள்ளுபடி செய்துள்ளது.

வடக்கு, கிழக்கில் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட பிரபல அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் கூட்டணிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் வேட்பு மனுக்கள் தொடர்பாகவும் மற்றும் நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் நிராகரிக்கப்பட்டிருந்த மனுக்கள் தொடர்பாகவும் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுக்களும் ரிட் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இதன்படி தொடர்ச்சியாக அந்த மனுக்கள் மகிந்த சமயவர்தன, சம்பத் அபேகோண் மற்றும் எஸ்.துரைராஜா ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் ஆராயப்பட்டுவந்தது.

குறித்த சகல மனுக்களும் ஆராயப்பட்ட போது, மனுதாரர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் தமது வாதங்களை முன்வைத்தனர். அதனை கேட்டறிந்த நீதியரசர்கள் குழாம், வியாழக்கிழமை அரசதரப்பு பதிலளிப்புக்கு காலம் ஒதுக்கியிருந்தது. அத்துடன் மனுதாரர்களை எழுத்துமூலமான சமர்ப்பணங்களை முன்வைக்கவும் சந்தர்ப்பம் வழங்கியிருந்தது.

இந்நிலையில் வெள்ளிக்கிழமையும் இந்த மனுக்கள் ஆராயப்பட்ட போது, சட்டமா அதிபர் தரப்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிடர்ஜெனரல் கனிஷ்டா டி சில்வா, ரிட் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லையென வாதிட்டார். இதனை ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம் முதற்கட்ட ஆட்சேனையின் போதே 53 ரிட் மனுக்களையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது தள்ளுபடி செய்வதாக அறிவித்தது.

இதேவேளை 6 அடிப்படை உரிமை மனுக்கள் ஆராயப்பட்ட போதும், அந்த மனுக்கள் தொடர்பான வேட்பு மனுக்களில் காணப்படும் குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது தள்ளுபடி செய்வதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

## மாபெரும் அரங்க ஆற்றுகை ‘வெள்ளியில் ஞாயிறு’



திருமறைக் கலாமன்றத்தின் வைரவிழா ஆண்டில் இடம்பெறும் மாபெரும் அரங்க ஆற்றுகையாக ‘வெள்ளியில் ஞாயிறு’ திருப்பாடுகளின் நாடகம் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அரை நூற்றாண்டைக் கடந்த வரலாற்றுப் பாரம்பரியத்துடன் யுத்தம், இடப்பெயர்வு உட்பட பல்வேறு நெருக்கடிகள் சூழ்ந்திருந்த காலங்களிலும் தொடர்ச்சியாக மேடையேற்றப்பட்டு சாதனைத் தடங்கள் பலவற்றைப் பதித்தவாறு தொடர்கின்ற பயணமாக இது அமைகின்றது. இதன் மூல வேர்களாக அமைந்த திருமறைக் கலாமன்ற ஸ்தாபகர் நீ. மரிய சேவியர் அடிகள் உட்பட ஏராளமான கலைஞர்கள் இன்று நம்மத்தியில் இல்லை. எனினும் அவர்களது ஆசியுடன் உறுதி தளராது தொடர்கின்றது பயணம்.

இத்திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்தின் பல்வேறு சாதனைச் சுவடுகளில் சில...

*1971 இல் யாழ் கோட்டை மதில்களை அரங்காகக் கொண்ட பிரமாண்டமான ஆற்றுகையாக நிகழ்த்தப்பட்டது - அன்பில் மலர்ந்த அமரகாவியம்.

*1973 இல் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட முதல் நாடகமாக திருச்சி தேவர் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது - களங்கம்.

*பெருங்காட்சிகளை சுருக்கி படச்சட்ட அரங்கிலும் இதனை மேடையேற்றலாம் என்பதை நிரூபித்து 1973 இல் மேடை யேற்றப்பட்டது - பலிக்களம்.

*1982 இல் ஈழத்தின் முதல் வீடியோ திரைப்படமாக வெளிப் புறக் காட்சிகளுடன் தயாரிக்கப்பட்டது - பலிக்களம்.

*தமிழ் சிற்றிலக்கிய வடிவங்களான உலா, பரணி, கலம்பகம் போன்ற வடிவங்களுக்குள் பாடுகளின் வரலாற்றின் அரங்க வடிவமாக அளிக்கை செய்தது சிலுவை உலா. கல்வாரிப் பரணி, கல்வாரிக் கலம்பகம்.

*சிங்கள, தமிழ்க் கலைஞர்களை ஒன்றிணைத்து ஊமம் வடிவத்தில் 1995 இல் முதன் முதலாக மேடையேற்றியது அன்பில் மலர்ந்த அமர காவியம்.

*1996 இல் யாழ்ப்பாணம் முற்றாக இடம் பெயர்ந்திருந்த சூழலிலும் வசதிகளற்ற அகதி வாழ்வு நிலையிலும், தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் சமகால வாழ்வியல் அவலங்களைப் பிரதிபலித்து நிகழ்த்தியது - கல்வாரிச் சுவடுகள்.

இவ்வாறு பலவற்றைக் கூறலாம்.

# சட்டவிரோத மண் அகழ்வால் விவசாய நிலங்கள் பாதிப்பு

### வெற்றிலைக்கேணி விவசாயிகள் கவலை

யாழ். வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பகுதியில் போர் நடைபெற்ற காலத்தில் இராணுவத்தால் நூற்றுக்கணக்கான டிப்பர்களில் மண் அகழப்பட்டதால் 15 இற்கும் மேற்பட்ட விவசாயிகளின் விவசாய நிலங்கள் முற்றுமுழுதாக பாதிப்படைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த விவசாயிகள்,

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக் கேணி உணவத்து அம்மன் கோயிலை அண்டிய மக்களின் விவசாய நிலங்களில் போர் நடைபெற்ற காலத்தில் இராணுவத்தால் நூற்றுக்கணக்கான டிப்பர்களில் மணல் அகழப்பட்டுள்ளது.



போர் முடிவடைந்து மீளக்குடியேறிய காலத்திலும் இராணுவம் எமது விவசாய நிலங்களில் மணல் அகழ்ந்தார்கள். அப்போது எம்மால் இதை தடுக்கமுடியவில்லை

இதனால் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் 15 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளோம். சம்பவம் தொடர்பாக உரிய தரப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்ட போதும் எது வித மாற்று நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

ஏனைய விவசாயிகள் தமது நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை செய்து பயன்பெறுகின்ற போதிலும் நாம் எந்தவொரு விவசாய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாமல் வாழ்வாதாரத்தை இழந்துவருகின்றோம்.

எமது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தொடர்ந்தும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உரிய அதிகாரிகள் மாற்றுவழியை ஏற்படுத்தி தருமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேசிய ரீதியில் புனித அந்தோனியார் கலைக்குழு படைத்த சாதனை



யூபிலி ஆண்டை முன்னிட்டு கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தால் தேசிய ரீதியாக நடாத்தப்படும் வியாகுல பிரசங்கம் மற்றும் ஒப்பாரி பாடல் போட்டியில் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் கலைக்குழு 2ம் இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளனர் (5) காலை 08.00 மணியளவில் மன்னார் புனித வளனார் திருமறைப்பணி நிலையத்தில் நிகழ்வு ஆரம்பமானது. தேசிய ரீதியாக பலர் பங்குபெற்றிய குறித்த போட்டியில் வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் கலைக்குழு பசாம் மற்றும் ஒப்பாரி போட்டியில் தேசிய மட்டத்தில் 2ம் இடத்தினை பெற்றுள்ளார்கள்.

இவர்களுக்கான பரிசில்கள் மற்றும் வெற்றிக் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடி - அநுர சந்திப்பில் என்ன நடந்தது?

## ஒரு பார்வை



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏழு முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தங்கள் 05 திகதி சனிக்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளன.

பாதுகாப்பு, மின் கட்டமைப்புகள் இணைப்பு, திருகோணமலையை எரிசக்தி மையமாக மேம்படுத்துதல், இலங்கையை டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் சுகாதாரத் துறையில் ஒத்துழைப்பு போன்ற துறைகளை உள்ளடக்கிய ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இவ்வாறு கைச்சாத்திடப்பட்டுள்ளன.

திருகோணமலையில் உள்ள எரிசக்தி மையத்துடன் தொடர்புடைய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஐக்கிய அரபு எமிரேட்ஸை உள்ளடக்கிய முத்தரப்பு ஒப்பந்தமாகும்.

இலங்கைக்கு மூன்றுநாள் அரசுமுறை பயணம் மேற்கொண்டு நேற்று இரவு வந்துள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு இன்று காலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அரச மரியாதை வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து பிரதமர் மோடி ஜனாதிபதி செயலகத்துக்கு வருகை தந்ததுடன், அங்கும் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்பை தொடர்ந்து இருநாட்டு பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுகள் ஆரம்பமாகின. பேச்சுகளை தொடர்ந்து ஏழு புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. பாதுகாப்பு, மின் கட்டமைப்புகள் இணைப்பு, திருகோணமலையை எரிசக்தி மையமாக மேம்படுத்துதல் என்பன முக்கிய ஒப்பந்தங்களாக பார்க்கப்படுகிறது.

குறிப்பாக பாதுகாப்பு ஒப்பந்தம் இந்திய தரப்பால் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையாகும். இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் தொடர்ந்து அதிகரித்து வருவதால் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக இந்தியா தொடர்ந்து தமது கவலையை வெளிப்படுத்தி வந்தது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளிடமும் இந்தியா இந்த கவலையை வெளிப்படுத்தியிருந்ததுடன், கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க புதுடில்லிக்கு சென்றிருந்த தருணத்திலும் இதுகுறித்து கலந்துரையாடப்பட்டது. இந்த பின்புலத்திலேயே பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அத்துடன், இருநாடுகளுக்கும் இடையிலான மின்கட்டமைப்பு இணைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தமாக பார்க்கப்படுகிறது. நில இணைப்பு தொடர்ந்து இந்தியா தொடர்ந்து இலங்கையிடம் கோரிக்கை முன்வைத்து வருகிறது. இதன் ஆரம்பகட்டமாக இந்த திட்டம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டப் பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும், பிரதமர் மோடியும் கூட்டு ஊடக மாநாட்டை நடத்தினர். இதன்போது கருத்து வெளியிட்ட பிரதமர் மோடி, மீனவர்கள் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறையுடன் நாம் முன்னேற வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறோம்.

அந்த வகையில் இந்திய மீனவர்களை உடனடியாக விடுவித்து, அவர்களின் படகுகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் எனக் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவால் 'இலங்கை மித்ர விபூஷண' விருது எனக்கு வழங்கப்பட்டது பெருமைக்குரிய விடயம் ஆகும் எனவும் பிரதமர் மோடி தெரிவித்தார்.

இந்தப் பெருமை எனக்கு மட்டுமல்ல, 140 கோடி இந்தியர்களுக்கும் கிடைத்த பெருமையாகும்.

இது இந்திய இலங்கை மக்களுக்கு இடையிலான வரலாற்று உறவுகள் மற்றும் ஆழமான நட்புக்கு கிடைத்த மரியாதையாகும். உண்மையான அண்டை நாடாகவும் நண்பராகவும் நமது கடமைகளை நிறைவேற்றியிருப்பது இந்தியாவிற்கு பெருமை சேர்க்கும் விடயமாகும்.

2019 பயங்கரவாதத் தாக்குதல், கோவிட் தொற்றுநோய், சமீபத்திய பொருளாதார நெருக்கடி என ஒவ்வொரு கடினமான சூழ்நிலையிலும் இலங்கை மக்களுடன் நாம் நின்றுள்ளோம்.

எமது அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையிலும், தொலைநோக்குப் பார்வையான 'மகாசாகர்' ஆகிய இரண்டிலும் இலங்கைக்கு சிறப்பு இடம் உண்டு என இந்தியப் பிரதமர் மோடி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவும் பல முக்கிய இந்திய-இலங்கை கூட்டுத் திட்டங்களை மெய்நிகர் வழியில் ஆரம்பித்து வைத்தனர்.

தொடங்கப்பட்ட திட்டங்களில் சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையம், தம்புள்ளையில் வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் விவசாயக் கிடங்கு மற்றும் இலங்கை முழுவதும் 5,000 மத நிறுவனங்களுக்கு சூரிய கூரை அமைப்புகளை வழங்குதல் ஆகியவை முக்கியமானவையாகும்.

06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரதமர் மோடி அநுராதபுரம் ஸ்ரீ மகா போதியில் வழிபாடுகளில் ஈடுபட்டதுடன், அதன் பின்னர் இந்தியா நோக்கி அநுராதபுரத்திலிருந்து புறப்பட்டார்.

# பெரும் தேசியம் குறுந்தேசியம் பேசுவதை கைவிட்டாலே போதும்

நேர்கண்டவர்:
ஜோ.ஜெஸ்ரின்

சென்ற வார தொடர்ச்சி...



டென்மார்க் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் சமூக நீதிபதி தருமன் தர்மகுல சிங்கம் யாழ்களரிக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்

**? எமது புலம் பெயர் மக்கள் பல நாடுகளிலும் வாழ்கிறார்கள். அமெரிக்க அதிபர் நிதியினை நிறுத்தியுள்ளார். சீனா வின் ஆதிக்கம் இலங்கையில் பரவி வருகின்றது. இந்த நிலையில் உலக அரசியல் எமது அரசியலோடு தொடர்பு படுவது குறித்து உங்கள் கருத்து?**

சீன நாடு இலங்கையில் என்ன என்னத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுதான் தலையாய கொள்கையாக இருக்கின்றது. இதேபோன்று அமெரிக்காவும். அமெரிக்கா இன்று கனடாவை கையகப்படுத்த நினைக்கின்றது. டென்மார்க்குக்கு சொந்தமான கிரீஸ் நாட்டை கையகப்படுத்த நினைக்கின்றது. பாலஸ்தீனத்தை கையகப்படுத்த நினைக்கின்றது. உலகின் முதலாளித்துவத்தின் தலைவராக தன்னை நியமித்து வைத்திருப்பவர் தான் டொனால்ட் ட்ரம். அதே போல தான் ஏனைய நாடுகளிலும் சீனாவும் இந்தியாவும் அப்படித்தான். யுத்தத்திற்கு பிற்பாடு இலங்கையின் முதலீடுகள் இன்று அரசாங்க வாகனங்களாக இருக்கலாம். மக்கள் மத்தியில் பாவிக்கப்படும் சகல இயந்திரங்களும் இந்தியாவினுடையது. யுத்தத்தினால் இலங்கை முழுக்க பலவீனப்பட்டு பொருளாதார ரீதியாக ஏனைய நாடுகள் விழுங்கி கொண்டிருக்கின்றார்கள். அது தற்போதைய அரசு தலைவருக்கும் தெரியும். ஆனால் தவிர்க்க முடியவில்லை. சீனா இலங்கைக்கு உதவி செய்ய வரவில்லை. அவர்களது நோக்கம் அதுவல்ல. இந்தியா என்ன நோக்கமோ அமெரிக்க என்ன நோக்கமோ அதுதான் சீனாவின் நோக்கமும் ஆகும். எங்களை சுற்றி ஒரு முள்வேலி போடப்பட்டுள்ளது. இலங்கையை சுற்றி பொருளாதார இறுக்கமான முள்வேலி போடப்பட்டுள்ளது. அடுத்தவர்களிடம் கடன் பட்டு வட்டிக்கட்டும் நிலை. NPP அரசாங்கம் மந்திரி மார்களுக்கான சலுகைகளை இல்லாமல் செய்துள்ளது. ஜனாதிபதிக்கான சலுகைகளை குறைத்து இப்படி பல ஆடம்பர செலவுகளை குறைத்து மக்களின் பயன்பாட்டுக்காக வைத்திருக்கிறார்கள். இவற்றை நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்

IMF தவிர வேறு யாரிடம் கடன் வாங்க முடியும். அந்த கடனை எவ்வாறு திருப்பி கட்டலாம் என்ற எண்ணம் சிந்தனை வேண்டும். தமிழ் டயஸ் போறா போல சிங்கள டயஸ் போராக்களும் அதில் கல்வி கற்றவர்கள் இங்கு வந்து வேலை செய்கிறார்கள். நாங்கள் தமிழ் டயஸ் போறா என்று சொல்லிக் கொண்டு இருக்கின்றோம். கல்வி பொருளாதார ரீதியில் வளமானது தான். ஆனால் யூடியூப்பர்களை நம்பி காசுகளை கொடுத்து சிறையிலும் அடைக்கிற கட்டத்திற்கு வந்திருக்கு டயஸ் போறாவினுடைய சிந்தனை என்பது அவர்களுடைய அறிவாற்றல் சார்ந்து தான் நாங்கள் பார்க்க முடியும்.

**? இலங்கையில் சமாதானம் நல்லிணக்கம் இனங்களுக்கிடையில் ஒற்றுமை கடந்த காலம் தற்போதைய நிலை எவ்வாறுள்ளது?**

பெரும் தேசியம் குறுந்தேசியம் பேசுவதை கைவிட்டாலே போதும். இந்த இரண்டு தேசியம் பேசுகிறவர்களும் அடக்கி வாசிச்சாலே போதும் அது நல்ல சகுனமாக இருக்கும். எம்மை போல சமாதானம் நல்லிணக்கத்திற்காய் வேலை செய்பவர்கள் அதிகரிக்கப்பட வேண்டும். மனித உரிமை மதிக்கப்பட வேண்டும். தமிழர்களே தமிழர்களுக்கு உரிமை கொடுக்கக் கூடாது என்று நினைப்பவர்கள் இருக்கின்றார்கள். சம உரிமை என்பது பலரிடம் இல்லாமல் இருக்கின்றது. நாங்கள் அனைத்துக்குமாக போராட வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆனால் இதற்கு ஆயுதம் தேவையில்லை. ஐக்கியத்தோடு ஜனநாயகப் பண்போடு மனிதாபிமானத்தோடு நாங்கள் இணைந்து பரந்த பணிகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கையின் பாடத்திட்டத்தில் மனித உரிமை சாசனத்தை கொண்டு வர வேண்டும்.

ஐந்தாம் வகுப்பில் இருந்து உயர்தரம் வரைக்கும் கொண்டு வர வேண்டும். பல்கலையில் அது இருக்கின்றது. மனித உரிமை பாடத்திட்டத்தில் வந்தால் தான் ஒவ்வொரு சிங்களவரும் ஒவ்வொரு தமிழரும் முஸ்லிம்களும் பேகர்களும் வாழும் குடிமக்களுக்கு தெரியும். உலகத்தில் மனித உரிமைகளை காப்பாற்றுகின்ற ஒரே ஒரு நாடு டென்மார்க். தமிழர்களின் குடும்ப ஒருங்கிணைப்பு சட்டத்தை தவறாக கையாண்டதற்காக டென்மார்க்கில் நீதி அமைச்சரை தண்டித்து அந்த அரசாங்கத்தையும் நிர்மூலமாக்கி ஆட்சியில் அமர்ந்தது. அது உச்சமான ஜனநாயக பண்பு டென்மார்க்கில் உள்ளது.

**? தர்மகுலசிங்கம் அவர்களே நீங்கள் ஒரு மொழி பெயர்ப்பாளராக கலை இலக்கிய கர்த்தாவாக சமூக நீதிபதியாக இருக்கின்றீர்கள். ஈழத்து பரப்பிலே எங்களது புலம்பெயர் வாழ் மக்கள் மற்றும் வட கிழக்கில் உள்ள தமிழர்கள் இணைந்து கலை இலக்கியப் பணிகள் உங்கள் அனுபவத்தின் ஊடாக எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

தமிழ் மக்கள் மத்தியில் வாசிப்பு பழக்கம் குறைந்து காணப்படுகின்றது. புலம்பெயர் தேசங்களில் பாடசாலைகளில் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்தும் திட்டங்கள் அத்தோடு பன்னாட்டு இலக்கியங்களை இங்கே கொண்டு வரும் வாய்ப்புகள் இருக்கின்றது. நான் மொழிபெயர்த்து அத்துடன் ஜெர்மன் பிரான்ஸ் இலக்கியங்கள் வடமொழியில் காளிதாசன் தமிழ் மொழியில் கம்பன் ஷேக்ஸ்பியர் எல்லோரையும் விட ஈடு இணையற்ற எழுத்தாளர்கள் தான் கிரிஸ்ரியன் அண்ரட்சன் அவருடைய 54 கதைகளை நான் தமிழுக்கு தந்திருக்கின்றேன். 46 ஆண்டுகள் புலம்பெயர்ந்து வாழ்பவன் என்ற அடிப்படையில் இலங்கையின் வாழ்வியலை விட பன்னாட்டு தேசத்து வாழ்க்கை முறை தான் அனுபவமாக அதிகம் இருக்கின்றது. இருந்தாலும் தாயகத்தில் தமிழ் அறிவு சிங்கள அறிவுககூடாக இலக்கிய தரிசன பெற்றுக் கொள்ள கூடியதாக இருக்கின்றது. தமிழர்களுக்கு ஒரு வரப் பிரசாதம். புலம்பெயர் இலக்கியம். புலம்பெயர் தமிழர்களின் பொருளாதாரம் அறிவு சார்ந்த விடயங்களையும் எங்களால் பகிர்ந்து கொள்ள முடிகின்றது.

**? பொருளாதார அபிவிருத்திக்கு உங்கள் பங்களிப்பு என்னவாக இருக்கின்றது?**

2012 ஆம் ஆண்டு ஆணையிறவு உப்பளத்தையும் கெமிக்கல் கூட்டுத்தாபனத்தையும் இயக்கி இருக்க என்னால் முடியும். அதற்காக நான் வந்த போது யாரும் கொடுக்கத் தயார் இல்லை. அவர்களது எதிர்பார்ப்பு வேறு. பசில் ராஜபக்ஷவை சந்தித்திருக்கின்றேன். முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனை சந்தித்த செய்தியை கண்டு ரிஷாட் பதியுதீன் ஓடி வருகின்றார். அவருடைய அலுவலகத்திற்கு என்னை அழைத்து விட்டு காவலிருத்தி திருப்பி அனுப்பினார். அந்த அளவுக்கு மிகக் குறுகிய சிந்தனை உடையவர்கள். மக்களை ஏமாற்றி வாக்கு பெறுகிறவர்கள். சாதாரண தொழில்நுட்பவியலாளராக இருந்த ரிஷாட் பதியுதீன் இன்று கோடான கோடிக்கு அதிபதி. எங்கிருந்து இந்த பணம் வந்தது? யார் கொடுத்தது? அவர் மீது எனக்கு கோபம் இல்லை. ஆனால் இவர்கள் எல்லாம் கொள்ளையர்கள். மக்களிடமிருந்து கொள்ளையடித்தவர்கள் என்று நான் தெளிவாக சொல்ல விரும்புகிறேன். நான் இப்பொழுது கூட ஜனாதிபதியுடன் கதைக்க தயாராக இருக்கின்றேன். அவர்கள் வழிவிட்டால் ஒழிய, மற்றபடி நாம் ஒன்றும் செய்ய முடியாது. இங்கிருக்கும் கச்சேரியில் சாதாரண பியூன்ல இருந்து கிளார்க்கில் இருந்து எல்லார் வரைக்கும் நாங்கள் சமாளிக்க தயாரில்லை. இந்த நாட்டு மக்களுக்கு தான் தேவை இருக்கு. ஆகவே முதலிடும் ஆர்வம் கொண்ட எம் போன்றவர்களை அன்பாகவும் மரியாதையாகவும் வரவேற்று மக்களுக்கு தேவையானவற்றை ஊழலற்ற இந்த அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நிர்வாகிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் மக்கள் தண்டனை கொடுக்க வேண்டும். இதில் ஒரு புதிய கலாச்சாரம் வரவேண்டும். ஒரு பண்பாட்டுத் தளத்தை உருவாக்க வேண்டும் இது மக்களின் கையில தான் இருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் விக்கினேஸ்வரா



# உள்நாட்டு போரால் உருக்குலையும் மியான்மாரில் நிலநடுக்க கோரம்!

இராணுவ (ஜுன்டா& Mya-nmar Jun-ta) ஆட்சியில் உள்ள மியான்மரில் உள்நாட்டு போரும் நீண்ட காலமாக நடந்து வருகிறது. தற்போது அங்கு நடந்த நிலநடுக்கத்தின் காரணமாக முழு நாடே நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

முன்னைய பர்மாவான தற்போதய மியான்மாரில் ஆளும் ராணுவ அரசாங்கத்துக்கு எதிராக பல்லின கிளர்ச்சியாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். இதனால் போரால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மர் மக்களை தற்போது நிலநடுக்கம் மேலும் பாரிய இன்னலுக்கு தள்ளி உள்ளது.

## நிலநடுக்கத்தின் பின்னரான போர் நிறுத்தம்:

இயற்கையின் சீற்றத்தை சீர் செய்யும் வகையில், ராணுவ அரசாங்கத்துக்கு எதிராக செயல்படும் மியான்மரின் ஆயுதப் பிரிவான மக்கள் பாதுகாப்புப்படை, இரு வார கால போர் நிறுத்தத்தை அறிவித்து உள்ளது.

மேலும் நிலநடுக்க மீட்புப் பணிகளை எளிதாக்கும் வகையில் சண்டை நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. தாங்கள் கட்டுப்படுத்தும் பகுதிகளில் பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் தற்காலிக மீட்பு மற்றும் மருத்துவ முகாம்களை நிறுவுவதை



உறுதி செய்ய ஐ.நா. மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் ஒத்துழைக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

## தொடரும் உள்நாட்டுப் போர்:

மியான்மர் ஒரு பல்லின நாடு. மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர்

பெரும்பான்மையின பௌத்த மக்கள் ஆவர். மீதமுள்ள மக்கள் மங்கோலிய, திபெத்திய–பர்மிய, தாய், மோன்–கெமர் மொழிகளைப் பேசுகின்றனர்.

காலனித்துவ ஆட்சியின் போது, பிரித்தாளும் தந்திரமாக பிரிட்டிஷ், பர்மாவில் பல தேசிய சிறுபான்மையினராக இருந்த மக்கள் இடையே முரண்பாடுகளை உருவாக்கி ஆங்கிலேயர்களால் ஆழ முடிந்தது.

காலனி ஆட்சியில் பர்மாவின் சுய நிர்ணய இறையாண்மையை பிரகடனப்படுத்துவது தேசிய சிறுபான்மையினர் தங்கள் தேசிய சுதந்திரத்திற்கான வாய்ப்பாக உணரப்பட்டது. அத்துடன் பிரிவினைவாத உணர்வுகள் பிரிட்டிஷாரால் தீவிரமாக தூண்டப்பட்டன. அவர்கள் காலனித்துவ நிர்வாகம் வெளியேறுவதற்கு முன்பு பல பர்மிய மாநிலங்களுக்கு சுதந்திரம் அளிப்பதாக உறுதியளித்தனர். அக்காலத்திலேயே மத்திய அரசுக்கு எதிர்ப்பு மையம் ஒன்று பர்மாவின் தென்கிழக்கில், கரேன் மாநிலத்தில் எழுந்தது. இந்த பிரதேசத்தின் முக்கிய மக்கள் கரேன் மக்கள், அல்லது திபெத்திய–பர்மிய மொழிக் குடும்பத்தின் கரேன் கிளையைச் சேர்ந்த தேசியங்கள் மற்றும் பழங்குடியினர் வாழ்ந்தனர்.

## 2021 இராணுவப் புரட்சி :

2021 மியான்மர் இராணுவப் புரட்சியின் பின்னர், ஆளும் சர்வாதிகார இராணுவ ஆட்சிக் குழுவிற்கு எதிராக மியான்மர் மக்களின் பல ஆயுதக் குழுக்கள் போராடி வருகின்றன.

தொடரும் இக் கொடிய போரில் டிசம்பர் 2024 வரை 80000 மேலான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 30,00,000 வரை வெளிநாடுகளில் புலம் பெயர்ந்துள்ளனர். மேலும் 1,13,700 மக்கள் உள்நாட்டில் புலம்பெயர்ந்துள்ளனர்.

2020 மியான்மர் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ஆங் சான் சூச்சி தலைமையிலான ஆளும் தேசிய ஜனநாயகக் கட்சி மிகப் பெரும்பான்மையான [83%] தொகுதிகளில் வெற்றி பெற்றது.

இந்த தேர்தலில் முறைகேடுகள் செய்து ஆங் சான் சூச்சி தலைமையிலான ஆளும் தேசிய ஜனநாய முன்னணி கட்சி வெற்றி பெற்றது செல்லாது என மியான்மர் இராணுவம் குற்றம் சாட்டியதுடன், 1 பிப்ரவரி 2021 அன்று இராணுவப் புரட்சி மூலம் அரசை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. நெருக்கடி நிலையை நடைமுறைப்படுத்தியும், நாடாளுமன்றத்தை முடக்கியும், ஆங் சான் சூச்சியை வீட்டுக் காவலில் வைத்தனர். இதனால் நாடு முழுவதும் மியான்மர் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராட்டங்களும், வன்முறைகளும் எழுச்சி பெற்றது.

இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டங்களால் மார்ச் 2023வரை எல்லைப்புற மாநிலங்களில் வாழும் 17.5 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவை என்றும், 1.6 மில்லியன் பொது மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர் என்றும்; 55,000 குடியிருப்புகள் குண்டு வீச்சுகளால் அழிந்துள்ளது என ஐ. நா. மதிப்பீடு செய்துள்ளது.

மியான்மரிலிருந்து 40,000 பேர் அண்டை நாடுகளான வங்காளதேசம், இந்தியா, தாய்லாந்து போன்ற அண்டை நாடுகளில் மக்கள் அடைக்கலம் அடைந்துள்ளனர். அக்டோபர் 2023 வரை மியான்மரின் 40% நிலம் அரசு கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும் மூன்றில் இரண்டு பங்கு 330 உள்ளாட்சிகள் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது

நீண்ட காலமாக தொடரும் உள்நாட்டு யுத்தத்தின் விளைவால் பாதிக்கப்பட்ட மக்களை தற்போதைய நில நடுக்க இயற்கை அனர்த்தமும் வெகுவாக பாதித்துள்ளது.

## மியான்மர் பாரிய நிலநடுக்கம்:

மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 10 ஆயிரம் கட்டிடங்கள் இடிந்து தரை மட்டமானதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் 28ம் தேதி சக்தி வாய்ந்த நிலநடுக்கம் காரணமாக மியான்மர் கடும் பாதிப்பை சந்தித்தது. இந்த நிலநடுக்கத்தால் ஏராளமான கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகின. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் சர்வதேச நாடுகள் உதவி செய்து வருகின்றன.



நிலநடுக்கத்தில் சிக்கி இதுவரை 3000 மேலான பொதுமக்கள் உயிரிழந்து உள்ளதாகவும், பத்து ஆயிரம் பொதுமக்கள் காயமடைந்துள்ளதாகவும், 500க்கும் மேற்பட்டோர் காணாமல் போனதாகவும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 10 ஆயிரம் கட்டிடங்கள் இடிந்தன

இந்த நிலநடுக்கத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டிடங்கள் இடிந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதில் பெரும்பாலான கட்டிடங்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் பல்வேறு இடங்களில் கனரக எந்திரங்கள் இல்லாததால் மீட்புப்பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மியான்மரில் நிலநடுக்கத்தால் தண்ணீர் விநியோகம், சுகாதார உள்கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

சுவாச தொற்றுகள், தோல் நோய்கள், டெங்கு காய்ச்சல் போன்ற நோய்க் கிருமிகளால் பரவும் நோய்கள், தட்டம்மை போன்ற தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய நோய்கள் ஆகியவற்றுக்கான பாதிப்பு அதிகரித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனை தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மசூதிகளில் 700 பேர் பலி

மியான்மர் நிலநடுக்கத்தின் போது, தொழுகையில் ஈடுபட்டிருந்த பலர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதி கூடிய ரிக்டர் அளவில் 7.7 ஆக பதிவான இந்த நிலநடுக்கம் மியான்மரில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலநடுக்கம், மியான்மர் தலைநகர் நய்பிடாவ், மண்டாலே நகரங்களில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

நிலநடுக்கத்தால் பல ஆயிரம் பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. அமெரிக்க புவியியல் ஆய்வு அமைப்பு, பலி எண்ணிக்கை பல மடங்கு உயரும் என, கணித்துள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்ட போது அப்போது நாடு முழுவதும் பல்வேறு மசூதிகளில் வெள்ளிக் கிழமை தொழுகை நடந்தது. தொழுகையில் ஈடுபட்டு இருந்த 700 பேர் உயிரிழந்தனர். பழைய காலத்தில் கட்டப்பட்ட பெரும்பாலான பல மசூதிகள் மிகவும் சேதம் அடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் வெற்று கைகளால் நாக பாம்பினை பிடித்த குருக்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் வெற்று கைகளால் நாக பாம்பினை பிடித்து, பாம்பினை காப்பாற்ற முயன்றவர் பாம்பு தீண்டியதில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.


புத்தூர், சிவன் கோவில் வீதியைச் சேர்ந்த கணேசக்குருக்கள் கௌரிதாசன் சர்மா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அண்மையில் இரவு, இவரது வீட்டின் முற்றத்தில் காணப்பட்ட



வலைகளுக்குள் நாக பாம்பு ஒன்று சிக்கி தவித்துக்கொண்டிருந்தது.

இதனை அவதானித்த அவர், வலைகளுக்குள் சிக்கி இருந்த நாக பாம்பினை வெற்று கைகளால் பிடித்து காப்பாற்ற முற்பட்ட வேளை பாம்பு அவரை தீண்டியுள்ளது.

அதனை அடுத்து , யாழ் . போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் அவர் உயிரிழந்துள்ளார்



## தோனி மரியாதையை இழந்து வருகின்றார்

2023 ஐபிஎல் பட்டத்தை சென்னை சூப்பர் கிங்ஸ் அணியினர் வெற்றிபெற்ற போது எம்.எஸ் தோனி ஓய்வு பெற்றிருக்க வேண்டும் என்றும், இப்போது ரசிகர்களின் மரியாதையை இழந்து வருவதாகவும் முன்னாள் வீரர் மனோஜ் திவாரி கூறியுள்ளார்.

சென்னை அணியில் தொடர்ந்து முக்கிய வீரராக இருக்கும் தோனி, இந்த சீசனில் சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டார், சென்னை அணி லீக்கில் தடுமாறி வருகிறது.

இதுவரை விளையாடிய 4 போட்டிகளில், தோனி 76 ஓட்டங்களை மட்டுமே எடுத்துள்ளார், இதனால், ரசிகர்களும் நிபுணர்களும் அவரது துடுப்பாட்ட நிலையை கேள்விக்குள்ளாக்கியுள்ளனர்.

டெல்லி அணிக்கு எதிராக இடம்பெற்ற லீக் போட்டியில் சென்னை அணி படுதோல்வியை சந்தித்திருந்தது. தோனி 26 பந்துகளில் வெறும் 30 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தார்.

இந்நிலையில், கிரிக்பஸிடம் பேசிய மனோஜ் திவாரி, 2023 ஐபிஎல் தொடரின் இறுதிப் போட்டிதான் தோனி ஓய்வு பெற சரியான நேரம் என்று கருதியதாக குறிப்பிட்டுள்ளார்.

சென்னை அணியின் ரசிகர்கள் தோனி மீது ஆதங்கப்பட தொடங்கியுள்ளனர், இது தோனியின் மாயாஜாலம் வேலை செய்யவில்லை என்பதற்கான அறிகுறி எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் ஓய்வு பெற சரியான நேரம் 2023 ஆம் ஆண்டு, அவர் ஐபிஎல் கிண்ணத்தை வென்றபோதுதான் என்று நான் நினைக்கிறேன். அப்போதே அவர் ஓய்வு பெற்றிருக்க வேண்டும்.

கிரிக்கெட்டில் அவர் சம்பாதித்த புகழ், பெயர் மற்றும் மரியாதை கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர் விளையாடும் விதத்தால் அது நழுவி வருவதாக நான் உணர்கிறேன். ரசிகர்களால் அவரை இப்படிப் பார்ப்பதை தாங்க முடியவில்லை.

சென்னை ரசிகர்களின் இதயங்களில் அவர் உருவாக்கிய நம்பிக்கை, ரசிகர்கள் வீதிகளில் அவருக்கு எதிராக பேசும் விதம், அவரின் மாயாஜாலம் வேலை செய்யவில்லை என்பதற்கான அறிகுறியாக இருந்திருக்க வேண்டும், என்று திவாரி மேலும் கூறினார்.

## யாழ் களரி பல்சுவை

# உலகின் மிக சக்திவாய்ந்த கடவுச்சீட்டு

## முதலிடத்தில் அயர்லாந்து; இலங்கைக்கு கிடைத்த இடம்

உலகைச் சுற்றிப் பார்க்க விரும்பாதவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு. ஆனால் ஒவ்வொரு நாட்டிற்கும் பயணிக்கத் தேவையான விசா நடைமுறைகள் மற்றும் ஆவணங்கள் பெரும்பாலும் மக்களை அந்த விருப்பத்திலிருந்து பின்வாங்கச் செய்கின்றன.

எனினும், இத்தகைய கடுமையான கட்டுப்பாடுகள் இல்லாத நாடுகளும் உள்ளன. அங்குதான் அந்த நாடுகளின் கடவுச்சீட்டுகளின் மதிப்பைப் புரிந்துகொள்ள முடியும்.

2025 ஆம் ஆண்டில் உலகின் மிக சக்திவாய்ந்த கடவுச்சீட்டு என்ற அந்தஸ்தை அயர்லாந்து தனி ஒரு நாடாக வென்றுள்ளது.

NOMAD passport indexஆல் வெளியிடப்பட்ட 2025 பட்டியலின்படி, அயர்லாந்து கடவுச்சீட்டு உலகின் ஏனைய



அனைத்து நாடுகளையும் விஞ்சி இந்த சாதனையை படைத்துள்ளது.

இந்தப் பட்டியலில் சுவிட்சர்லாந்து இரண்டாவது இடத்தில் உள்ளது. கிரீஸ் மூன்றாவது இடத்தில் உள்ளது. போர்ச்சுகல் நான்காவது இடத்தில் உள்ளது. மால்டா ஐந்தாவது இடத்தில் உள்ளது.

இத்தாலி, லக்சம்பர்க், பின்லாந்து, நார்வே மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவை முதல் பத்து நாடுகளில் இடம் பெற்றன. பட்டியலில் முதல் ஒன்பது இடங்களையும் ஐரோப்பிய நாடுகள் பிடித்துள்ளன.

இந்தப் பட்டியலில் அயர்லாந்து தனி நாடாக முதலிடத்தைப் பிடிப்பது இதுவே முதல் முறை. 2020 ஆம் ஆண்டில், அயர்லாந்து லக்சம்பர்க் மற்றும் ஸ்வீடனுடன் முதலிடத்தைப் பகிர்ந்து கொண்டது.

விசா இல்லாத பயணம், வரிவிதிப்பு, நாட்டின் உலகளாவிய பிம்பம், இரட்டை குடியுரிமைக்கான சாத்தியம் மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் ஆகியவை உலகின் சிறந்த கடவுச்சீட்டிற்கான அளவுகோலாகக் கருதப்படுகிறது.

அயர்லாந்து 109 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது.

199 நாடுகள் கொண்ட இந்தப் பட்டியலில் இலங்கை இந்தப் பட்டியலில் 43.5 புள்ளிகளுடன் 168வது இடத்தில் உள்ளது. எவ்வாறாயினும் இந்தப் பட்டியலில் அமெரிக்கா 45வது இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விஜய் பட சாதனையை முறியடித்தது அஜித்தின் குட் பேட் அக்லி

பிரபல நடிகர் அஜித் குமாரின் நடிப்பில் உருவாகியுள்ள குட் பேட் அக்லி திரைப்படம் மிகப்பெரிய அளவில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அடுத்த வாரம் இந்தப்படம் திரைக்கு வரவுள்ளது.

ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் மைத்திரி மூவி மேக்கர்ஸ் தயாரிப்பில் உருவான இப்படத்தில் த்ரிஷா நாயகியாக நடித்திருக்க ஜி.வி பிரகாஷ் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

மேலும் அர்ஜுன் தாஸ், பிரசன்னா, பிரபு, சுனில் என பலர் இப்படத்தில் நடித்துள்ளனர். கமர்ஷியல் படமாக அதே சமயத்தில் வித்யாசமான ஒரு படமாக தயாராகியிருக்கும் குட் பேட் அக்லி திரைப்படத்தின் ட்ரைலர் சில தினங்களுக்கு முன்பு வெளியானது.

ஏற்கனவே இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு பலமடங்கு இருக்க ட்ரைலர் வெளியீட்டிற்கு பிறகு படத்தின் மீதான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது. ஏப்ரல் 10 ஆம் திகதி தமிழ் புத்தாண்டை முன்னிட்டு இப்படம் திரையில் வெளியாக இருக்கின்றது.

குட் பேட் அக்லி ட்ரைலர் வெளியாகி 24 மணி நேரத்தை கடந்துவிட்டது. இந்த 24 மணி நேரத்தில் குட் பேட் அக்லி ட்ரைலர் 32 மில்லியன்



பார்வையாளர்களை பெற்று சாதனை படைத்திருக்கிறது.

இதன் மூலம் தமிழ் சினிமாவில் 24 மணி நேரத்தில் அதிக பார்வையாளர்களை பெற்ற ட்ரைலர் என்ற சாதனையையும் பெருமையையும் பெற்றுள்ளது அஜித்தின் குட் பேட் அக்லி.

இதற்கு முன்பு விஜய்யின் லியோ திரைப்படம் தான் இந்த சாதனையை வைத்திருந்தது. லியோ ட்ரைலர் 24 மணி நேரத்தில் 31 .4 மில்லியன் பார்வையாளர்களை பெற்றது. அந்த சாதனையை தற்போது குட் பேட் அக்லி திரைப்படம் முறியடித்துள்ளது. விஜய் பட சாதனையை அஜித்தின் படம் முறியடித்துள்ளதால் அஜித் ரசிகர்கள் குஷியில் இருக்கின்றனர்.

## இந்த விலங்கினத்தில் ஆண் தான் கருவுறுமாம்



மனிதர்களாக இருந்தாலும் சரி விலங்குகளாக இருந்தாலும் சரி பெண் இனம் தான் கருவுற்று குட்டியீனும் இல்லையா. ஆனால், ஒரு விலங்கினத்தில் மட்டும் ஆண் இனம் கர்ப்பத்தை சுமக்கிறது.

அதாவது, குதூணஞ்ஞணச்ஞுடடிஞீச்து குடும்பத்தைச் சேர்ந்த மீன்களின் குழுவில் ஆண் மீன்களே சந்ததியை சுமக்கின்றன.

குறிப்பாக கடல் குதிரைகள். இவற்றின் உடலமைப்பின் காரணமாக குழந்தைப் பேறு மற்றும் வளர்க்கும் பொறுப்பு பெண்களிடமிருந்து ஆண்களுக்கு மாற்றப்படுகிறது. முதலில் பெண் விலங்கு முட்டைகளை ஆண் விலங்கின் வயிற்றுக்கு மாற்றுகிறது. இதற்காக ஆண் கடல் குதிரையின் வயிற்றில் சிறப்பு பைகளும் காணப்படுகின்றன. அங்கு அவை முட்டையிடுகின்றன. எனவே முட்டைகள் ஆணின் உடலில் கருவுறுகின்றன. இவை குஞ்சு பொரித்து பிறப்பதற்கு இரண்டு முதல் நான்கு வாரங்கள் வரை ஆகிறது.

ஒரு கடல் குதிரை ஒரு நேரத்தில் 50 முதல் 1000 குட்டிகளை ஈனுகிறது. ஆனால், ஒரு கடல் குதிரை குஞ்சு மட்டுமே முதிர்ச்சியடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேஷம்**
அனுகூலமான வாரம். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணை வழியில் மகிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு தாயின் தேவைகளை நிறைவேற்றி, அவருடைய ஆசிகளைப் பெறும் வாய்ப்பு உண்டாகும். பிள்ளை களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**ரிஷபம்**
எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்று தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். வாழ்க்கைத்துணை வழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். தந்தை வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**மிதுனம்**
எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாக முடியும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**கடகம்**
இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் தொடர் ஆதாயமும் கிடைக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் அதிகாரியின் பாராட்டுகள் மனதுக்கு உற்சாகம் தரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**சிம்மம்**
மனதில் இனம் தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர் செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். வாழ்க்கைத்துணை வழி உறவுகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சக பணியாளர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வார்கள்.

**கன்னி**
அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தந்தை வழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கிய முடிவுகளை பிற்பகலுக்கு மேல் மேற்கொள்வது சாதகமாக முடியும். பிற்பகலுக்கு மேல் தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். அலுவலகத் தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும். வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும்.

**துலாம்**
உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத் துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைப்பது மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம்**
மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களால் பிரச்னைகள் ஏற்படக்கூடும். பொறுமை தேவை.

**தனுசு**
புதிய முயற்சி எதுவும் வேண்டாம். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மகரம்**
சிலருக்கு பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும். வாழ்க்கைத்துணை உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். கணவன் – மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப் படும். வியாபாரத்தில் சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**கும்பம்**
பிற்பகலுக்குமேல் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரம் பிற்பகலுக்குமேல் விறுவிறுப்பாக நடக்கும். லாபமும் கூடுதலாகக் கிடைக்கும்.

**மீனம்**
எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப் பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.




**நம் அனைவருக்கும் சமமான திறமை இல்லை. ஆனால், நம் அனைவருக்கும் நம் திறமையை வளர்த்துக் கொள்ள சமமான வாய்ப்பு உண்டு.**
- அப்துல் கலாம்-

## பழமொழிகள்

01. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
2. ஆறின கஞ்சி பழங் கஞ்சி.
3. ஆனைக்கு ஒரு காலம்
4. பூனைக்கு ஒரு காலம்.
5. ஆடத் தெரியாதவன் அரங்கு கோணல் என்றானாம்
6. ஆபத்துக்குப் பாவமில்லை.
7. ஆழமறியாமல் காலை இடாதே.
8. ஆனை வரும் பின்னே. மணி ஓசை வரும் முன்னே
9. ஆடுற மாட்டை ஆடிக் கறக்கனும்
10. ஆடு பகையாம். குட்டி உறவாம்
11. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
12. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
13. கெடுவான் கேடு நினைப்பான்
14. குப்பையிலே கிடந்தாலும் குன்றுமணி மங்காது
15. கிட்டாதாயின் வெட்டென மற.
16. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளர்ப்பமேன்
17. கரும்பு தின்ன கைக்கூலியா
18. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
19. எய்தவன் இருக்க அம்பை நோவானேன்
20. ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமோ

## ஆங்கிலம் கற்போம்




| | |
|---|---|
| தேவை | - Need |
| வெளியேறு | - Exit |
| வலி | - Pain |
| ஆசை | - Desire |
| ஏதேனும் | - Any |
| பயம் | - Fear |
| அருகில் | - Near |
| பாதை | - Path |
| பயணம் | - Travel |
| பலவீனம் | - Weak |




## ஒத்த கருத்துச் சொற்கள்

* சங்கதி - செய்தி
* காப்பு - வளையல்
* சலம் - நீர்
* சாலை - வீதி
* சிந்தனை - நினைவு
* சில்லு - சக்கரம்
* சீற்றம் - கோபம்
* செவி - காது
* செய்தித்தாள் - நாளிதழ்

## தொடர்பு படுத்துக...

| | | |
|---|---|---|
|  | o o | குரங்கு |
|  | o o | மான் |
|  | o o | கரடி |
|  | o o | யானை |
|  | o o | புலி |

## வித்தியாசங்கள் கண்டுபிடியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் களரி
ISSN - 2613 - 828X
No: 28/1, A.V. Road
Colombothurai, Jaffna
www.yarlgallery.com
yarlgallery@gmail.com





















இப்பத்திரிகை 28/1 ஏ.வி.வீதி கொழும்புத்துறை பணிமனை யாழ் களரி ஆசிரியர் ... அச்சிட்டு வெளியிடப்பட்டு 06.04.2025 அன்று அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org